பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 07 | ஞாயிற்றுக்கிழமை | (24.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 248

# எமது போராட்டத்தின் பலனாக

# இடைக்கால சபை அமைய வேண்டும்

## பாரிஸ் மாநாட்டை ஆரம்பித்து வைத்து சு.ப.தமிழ்ச்செல்வன் உரை

(பாரிஸ்)

**மிக நீண்ட காலமாக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட எமது மக்களின் போராட்ட முயற்சிகளுக்குப் பலனைத் தேடிக் கொள்ளும் வகையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கான ஆலோசனைகளை மேற்கொள்ளவே இங்கு நாம் கூடியுள்ளோம். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.**

இலங்கை அரசுக்கு அனுப்பி வைபபதற்கான இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபை தயாரிப்பதற்கான மாநாட்டை நேற்று பாரிஸில் ஆரம்பத்து வைத்துப் பேசும் போதே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபை ஆராய்வதற்கான மாநாடு தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு (ஐரோப்பிய நேரம்) பாரிஸில் ஆரம்பமானது.

இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், அவர்களது சர்வதேச சட்ட நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய தமிழ்ச்செல்வன் மேலும்கூறுகையில்;

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபு ஒன்றை அரசு எமக்கு சமர்ப்பித்து இருந்தது. எமது தலைமையின் முடிவுக்கு அமைய அவர்களுடைய திட்ட வரைபை நாம் நன்கு பரிசீலித்து எமது மக்களுடைய நலன்கள், அபிலாஷைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதொரு வரைபை கையளிப்பதற்காக இங்கு கூடியுள்ளோம்.

எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய முழுமையான அதிகாரங்களைக் கொண்டதான இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபை இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் கூறினார்.

மாநாட்டின் ஆரம்பத்தின் போது சர்வதேச செய்தியாளர்கள் படப்பிடிப்பாளர்கள் ஆகியோர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன் போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் தமிழ்ச்செல்வன் பதில் அளித்தார்.

தொடர்ந்து நடைபெறவுள்ள மாநாட்டின் இறுதி நாளில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் கலந்து கொண்டு இலங்கை அரசினது திட்டவரைப்புக்கும் விடுதலைப்புலிகளின் பதில் வரைபுக்குமான வித்தியாசங்களை ஆராயவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)



நேற்று தங்கரதத்தில் முருகன் பவனி வந்த காட்சி.

# மனித உரிமை மீறல்களில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கருத்து

(கொழும்பு)

பொலிஸ் பாதுகாப்பில் உள்ளவர்களின் மனித உரிமை மீறப்படும் பொழுது அதற்கு பொலிஸாரே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் பொழுது பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெறுவதால் பொலிஸார் மீது பொது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

சில சிறைக் கைதிகள் பொலிஸாரினால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதனால் ஆயுட்காலம் முழுவதும் ஊனமடைந்த நிலையில் உயிர் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. தவிரவும் பொலிஸாரின் சித்திரவதையினால் கைதிகள் சிலர் உயிரிழக்க வேண்டியும் ஏற்பட்டிருக்கின்றது.

அதேவேளை, தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது கடமைகளை உரிய முறையில் செய்வதற்கு தவறிவிட்டது என்றும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெர்ணான்டோ குற்றம் சாட்டியுள்ளார். (த)

# தேர்தல் வேட்பாளர்களை நியமிக்க குழு அமைப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை நியமிக்க குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இத் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ம் திகதிவரை தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இதுவரை 200க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# உள்ளூராட்சி தேர்தலில் தனித்தே போட்டியிடுவோம்

## பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து போட்டியிடுவதிலும் பார்க்க தனித்து போட்டியிடுவதே கட்சிக்கு அனுகூலமானது என்றும்

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் தனித்தரப்பா என்பதை தீர்மானிப்பது அரசும் புலிகளுமே!

## நோர்வேயின் ஊடகப் பிரிவு அதிகாரி உரை

(வவுனியாவில் இருந்து வே.தவச்செல்வன்)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நடுநிலைமையாளராக ஈடுபட்டு, சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடுமாறு நோர்வே அரசாங்கத்தை முதலில் அழைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காதான்.

இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதரக ஊடகப் பிரிவு அதிகாரி தோமஸ் தெரிவித்துள்ளார்.

முரண்பாடுகளை களைவது தொடர்பான மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில், நேற்று வவுனியாவில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இடம் பெற்றது.இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்;

நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையே 20 வருடகால உறவு உள்ளது.இலங்கையில் மாத்திரம் அல்ல மத்திய கிழக்கிலும், ஐ.நா.அமைப்பிலும் சமாதானத்துக்காக சேவையாற்றிவரும் நாடு நோர்வே. இந் நிலையில் இலங்கையில் தீய நோக்கில் ஒரு போதும் நாம் செயற் படமாட்டோம்.

அரசாங்கத்திடமும் விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் சேவை ஆட்சேர்ப்பு நேற்று ஆரம்பமாகியது

(மட்டக்களப்பு)

கடந்த 19ம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன்படி கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவைக்கு புதிதாக 550 முஸ்லிம் இளைஞர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகியதாக கிழக்குப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசேகர தெரிவித்தார்.

கிழக்கில் அவசர பொலிஸ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில், 50 சப்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வடகிழக்கில் கண்ணி அகற்றும் பணிக்கு
# 22 இலட்சம் டொலரை அமெரிக்கா செலவிடும்

(கொழும்பு)

வடக்குகிழக்குப்பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கும் அதற்குப் பயிற்சி அளிப்பதற்கும் 22 இலட்சம் அமெரிக்கடொலர் செலவாகும் என அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மனிதாபிமான அடிப்படையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதறகான பயிற்சிகளை இலங்கை இராணுவத்திற்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் அமெரிக்கத்தூதரகங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஜேம்ஸ் எவ்.என்விஸ்லும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம்,4 அமெரிக்க நிபுணர்கள் உட்பட 6 கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு சர்வதேச அதிகாரி தரத்துக்கு அமைய கண்ணிவெடி அகற்றும் தொழில்நுட்பங்களைப் பயிற்றுவிக்க உள்ளனர்.

இன்று ஆரம்பமாகும் இப்பயிற்சி அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் வரை நடைபெறவுள்ளது.

(தி)

## ரயில்வே திணைக்கள
# காணிகளை வசப்படுத்தியோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்துற்குச் சொந்தமான காணிகளை சட்ட விரோதமாகப் பயன்படுத்துவோருக்கு எதிராக துரித விசாரணைகளை, மேற்கொண்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ரயில்வே அதிகார சபை தீர்மானித்துள்ளது.

சட்டவிரோதமாக இக்காணிகளைப் பயன்படுத்திவருவோர் குறித்து துரித விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அதிகார சபையில் சட்டபிரிவு ஒன்றை உருவாக்கத் தீர்மானித்திருப்பதாக சபைத்தலைவர் ஹேமச்சந்திர மாலதுங்க தெரிவித்துள்ளார்.

பல வர்த்தகர்களும் சட்ட விரோதமாக ரயில்வே திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் கட்டடங்களை அமைத்திருப்பதாகவும்,இவ்வாறான நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும்,சட்டப்பிரிவில் அரச சட்டத்தரணிகளும் மதிப்பீட்டார்களும இருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

(உ-8)

## நாவலர் பாடசாலையில் நேற்று
# சிறுவர்களின் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏழாவது ஆண்டு ஆரம்ப விழாவினதும், சிறுவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் நேற்று யாழ். நாவலர் பாடசாலையில் இடம்பெற்றது.

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகச் சமூக சேவைகள் திணைக்கள அத்தியட்சகர் கே.வி.சிவநேசன் கலந்து கொண்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களுக்கான மாதாந்த உதவித் தொகையும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது.

(உ-7)

## க.கா.குழு – புலிகள் இடையில்
# நாளை விசேட சந்திப்பு
## சம்பூரில் இடம்பெறும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின தற்போதைய நிலைவரம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையே விசேட சந்திப்பொன்று மூதூர் கிழக்கு சம்பூரில் நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு நடைபெறவுள்ள இச்சந்திப்பில் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர். அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பேச்சாளர் ஆகியோரும், தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் பதுமன், திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது, கிண்ணியா குரங்குபாஞ்சான் விடயம் உட்பட கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகள். ஆட்கடத்தல்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

(தி)


சிவமயம்



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய

சுபானு வருட

மஹோற்சவ விஞ்ஞாபனம் – 2003

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வே
ளேறிய மஞ்ஞை வாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

நிகழும் சுபானு வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள் (27.08.2003) புதன்கிழமை பின்னிரவு 1.36 மணியளவில் கொடியேற்ற வைபவத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகும். 5ஆம் திருவிழா ஆவணி 14 ஞாயிறு (31.08.2003) காலைத்திருவிழா 8.00 மணிக்கு ஆரம்பம். அன்று சதுர்த்தி மாலை 4.00 மணியளவில் விநாயகர் வேலவர் எழுந்தருளல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 ஆம் திருவிழா | பூங்காவனம் | ஆவணி 19 | வெள்ளிக்கிழமை | 05.09.2003 | காலை 9.00 மணி |
| 11 ஆம் திருவிழா | கைலாசவாகனம் | ஆவணி 20 | சனிக்கிழமை | 06.09.2003 | காலை 8.00 மணி |
| | சப்பறத் திருவிழா | ஆவணி 22 | திங்கட்கிழமை | 08.09.2003 | மாலை 5.00 மணி |
| | தேர்த்திருவிழா | ஆவணி 23 | செவ்வாய்க்கிழமை | 09.09.2003 | காலை 8.30 மணி |
| | தீர்த்தத்திருவிழா | ஆவணி 24 | புதன்கிழமை | 10.09.2003 | காலை 8.00 மணி |
| அன்று மாலை | மௌனத்திருவிழா | ஆவணி 24 | புதன்கிழமை | 10.09.2003 | மாலை 5.00 மணி |

பிரதம குருக்கள்:- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகசாமி ஐயர் - சிவசண்முக ஐயர்

கைங்கரியங்களுக்கும் சகலவிதமான நேர்த்திகளுக்கும் களஞ்சிய அறையில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

மடம்கட்டவிரும்பும் அடியார்கள் என்னுடன் தொடர்புகொள்ளவும்.

[C/6577]

ஆலய உரிமையாளர்:- தங்கராசா ஐயர் - கனகேந்திரம் ஐயர்

# சதோசவுக்கு எதிராக மனித உரிமை மீறல் மனு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா நிதக சேவக சங்கமய அமைப்பு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கு (சதோச) எதிராக மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றில் தாக் கல் செய்துள்ளது.

சதோசவின் பணிப்பாளர்களும் அதன் நிர்வாகிகளும் இம் மனுவில பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுய விருப்பில் ஓய்வு பெறுவோருக்கான விசேட நிவாரணத் திட்டம் வடிவமைக்கப்பட்ட போதும், உறுதியளிக்கப்பட்டவாறு இதுவரை ஓய்வில் சென்றோரிற்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளதுடன்,இதனால் தமது அடிப்படை உரிமைகள் மீறப் பட்டதாகவும் சுய விருப்ப ஓய்வூதியத்திட்டத்தை நியாயமான விதத்தில் அமுல்செய்யுமாறு சதோசவிற்கு உத்தரவிடுமாறும் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர். (உ-10)



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையினரால் மரம் நடுகைத்திட்டம் அமுல் படுத்தப்பட்டது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஸ்ணசாமி மங்கள விளக்கேற்றி திட்டத்தை ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம்.

(படம்:வ. அன்ரன்சிங்கராஜ்)



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்குபிரதேச சபையின் கீழ் இயங்கும் அளவெட்டி பொது நூலகத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் முன்னாள் பிரதேச செயலர் திருமதி பா. சிறிபாஸ்கரன் உரை நிகழ்த்துவதனையும் அருகில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஸ்ணசாமி,பிரதேச சபையின் செயலர் பொ. வைரமுத்து ஆகியோரையும் காணலாம்.

(படம்: த. கமலரூபன்)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேச சபைகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் யாழ் மாவட்ட மட்டத்தில் வலி.வடக்கு பிரதேச சபை முதலாம் இடத்தையும்,மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. அதற்காக வழங்கப்பட்ட வெற்றிக்கேடயங்கங்களுடன் பிரதேச சபையின் செயலர் பொ. வைரமுத்துவும் ஏனைய பணியாளர்களும் காணப்படுகின்றனர்.

(படம்:த. கமலரூபன்)



தீவக அரிமாக்கழகம் யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் அண்மையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் லயன் வி. திருச்செல்வமும் லயன் சீமாட்டி திருமதி யோகலட்சுமியும் பயனாளி ஒருவருக்கு கண்ணாடி அணிவிக்கின்றனர். டாக்டர் லயன் கே.ராஜரட்ணம், கழகச் செயலாளர் லயன் க. கணபதி,கழகத் தலைவர் லயன் எம். மகேந்திரன் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

## பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்களை

# வேலைக்குத் திரும்புமாறு கோரிக்கை

(கொழுமபு)

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை முதல் வேலைக்குத் திரும்புமாறு மூனறாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்காசிம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அமைச்சு அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில்,

பல்கலைக் கழகங்களை மூடச் செய்வதன்மூலம் குறுகிய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற அனுமதிக்கக்கூடாது. பல்கலைக்கழகக்கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இந்த மாதம் முதலாம திகதி தொடக்கம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பலருககு 5 ஆயிரம் ரூபா காலப் படி வழங்கப்படுவதெனவும் ஏ-5, ஏ5ஏ தரங்களில் உள்ள ஊழியர்களுக்கு 175 ரூபாவில் இருந்து 205ரூபா வரையிலான சம்பள உயர்வும் ஏ-5, ஏ5பி ஏ-6 தரங்களில் உள்ள ஊழியர்களுக்கு 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிதொடக்கம், அதேவருடம் ஜூன்மாதம் 30ஆம் திகதிவரையான சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட தொகையும் மீண்டும் வழங்கப்படவுள்ளது.

ஏ-4சி தரத்தில் உள்ள ஊழியர்களுக்கான சம்பளமும் 300ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

சம்பள முரண்பாடுகள் தொடாபாக சகல பல்கலைக்கழக தொழிற் சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரும் தீர்வு காணப்படாது இருக்கும் விடயங்கள் குறித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையத்திடம் ஒப்படைக்கப்படும்.

57வகையான உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட 3சம்பள உயர்வுகளை ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆராய உள்ளனர்.

இது சம்பந்தமான நீதிமன்றத் தீர்ப்புக்குறித்து சட்டமா அதிபருடன் கலந்துரையாடுவதெனவும் ஏனைய 19கோரிக்கைகள் தொடாபான சுற்று நிருபங்களை இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னராக வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவிறகு அறிவுறுத்தல் செய்யப்பட்டது தொடர்பாக ஆராயப்பட்டது எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## இடைக்கால நிர்வாக சபை விவகாரம்

# எதிர்க்கட்சிகளின் நாடிபிடித்தறிய தயாராகின்றது ஆளும் கட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபை தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ்,மிலிந்த மொறகொட ஆகியோர் முதற் தடவையாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தினால் தயாரித்து வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியமை தெரிந்ததே.

இதேசமயம்,விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள சட்ட நகல் குறித்து பாரிஸில் ஆராய்ந்து கொண்டிருக்கும் புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெற்றதும் பாராளுமன்றத்திலுள்ள சகல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளது.

(உ-18)

# முஸ்லிம்களது பாதுகாப்பற்ற சூழ்நிலையை தமிழ்க்கட்சிகள் உணர வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் அறிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் தங்களது பாதுகாப்பிற்காக சட்ட பூர்வமாகவே அரசாங்கத்தின் உதவியை நாடியுள்ளனர். இதனை எவரும் மிகைப் படுத்தி பிழையான அர்த்தம் கொள்ளக்கூடாது.

இவ்வாறு கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

முஸ்லிம் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காகவே பொலிஸ் சேவைக்கு மேலதிக ஆட்சேர்ப்பு இடம்பெறுகிறது.

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறுவதாக தமிழ் அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த ஒன்றரை வருடங்களாக முஸ்லிம்கள் பாரிய இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.



இதனால் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழல், அவர்களின் பாதுகாப்பு என்பவற்றை உணர்ந்து தமிழ்க் கட்சியினர் செயற்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(தி)

## மூத்த கலைஞர் கௌரவிப்பு

(நெல்லியடி)

கரவெட்டிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டிய மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஸ்ணசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

அத்துடன்,உள்ளூராட்சி வாரத்தை முனனிட்டு கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடாத் தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன.(உ-44)

## எழுச்சிப் பேரவை தெரிவு

(பளை)

பரந்தன் பிரதேசத்தில் ஊரக எழுச்சிப் பேரவைத் தெரிவுகள் கடந்த 16ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இடம்பெற்றன.

இத்தெரிவில் எழுச்சிப்பேரவைக் கூட்டமைப்புத் தொடர்பாக பிரதேசப் பொறுப்பாளர் சே.சுதா கருத்துக்களை வழங்கியுள்ளார்.(உ-97)

## ஆங்கிலப்பயிற்சி நெறி

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்ஆலய தேவஸ்தானமும் இந்துகலாசார அமைச்சும் இணைந்து புலோலியில் நடாத்தி வரும் கணனிப் பயிற்சி நிலையத்தில் ஆங்கிலப் பயிற்சி நெறியும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

(உ-52)

# கண்பார்வை குறைந்த 258 பேருக்கு கண்ணாடி

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை நெடுந்தீவில் நடாத்திய இலவச வைத்திய சிகிச்சை முகாமிலேயே கண்பார்வை குறைந்த 258 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இவ் வைத்திய சிகிச்சை முகாம் நெடுந்தீவு திலீபன் வைத்தியசாலையில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத்தலைவர் வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

கண் வைத்திய சிகிச்சை முகாமில் 368 பார்வை குறைந்தவர்கள் வைத்திய சிகிச்சைகளைப் பெற்றதுடன்,258 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 675 நோயாளர்கள் பொது மருத்துவ வைத்திய சிகிச்சைகளைப் பெற்றனர். நீரிழிவு, இரத்த அமுக்கம் நோய்களுக்கான பரிசோதனைகளும் நடைபெற்றன.

ஆழியவளை திலீபன் வைத்தியசாலைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி, நெடுந்தீவு திலீபன் வைத்தியசாலைப் பொறுப்பாளர் பூவேந்தன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ஈழச்செல்வன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாள் ஆகியோர் வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்டனர். (உ-52)

### ஈராக்கிற்கு படைகளை அனுப்புவது குறித்து

# அமெரிக்காவின் உயர் மட்டத்தில் இரு வேறுபட்ட கருத்துக்கள்

(வாஷிங்டன்)

உலக நாடுகள் தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் தீவிர முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ள நிலையில், அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்புவது. தேவையற்றதொன்றென கூறியுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்கா தலைமையிலான போர் முடிவடைந்ததையடுத்து அங்கு பிறநாட்டுப்படைகளை பணிகளில் ஈடுபடுத்த அமெரிக்கா நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதன்பிரகாரம் இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் படை உதவிகளைக் கோரிவந்தது.

இதற்கு அந்த நாடுகள் மறுப்புத் தெரிவித்து வந்தபோதி லும் தமது முயற்சியைக் கை விடாது அதனை மேலும் தீவிரப் படுத்தியுள்ளது.

இதேவேளை, ஈராக் தலைநகர் பக்தாத்திலுள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தீவிரவாத தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து ஈராக்கில் பாதுகாப்புப் பலவீனமடைந்துள்ளது. அத்துடன் அங்கு மேலும் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவையே சார்ந்துள்ளது என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்ப வேண்டிய தேவை இருப்பதாகத் தனக்குத் தோன்றவில்லையென கூறியுள்ளார்.

அமெரிக்காவின் ஹொண்டுராஸில் என்னும் இடத்தில் இடம் பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இக்கருத்தை வெளியிட்ட ரம்ஸ்பீல்ற் ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளபதிகளுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வூல்வ்விற்ச் தொடர்புகொண்டு அண்மையில் பேசியிருந்தார் என்றும், அங்கு படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை இல்லையென்று அவர்கள் வூல்வ்விற்ச்சிற்கு கூறியிருந்தார்கள் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த இரு வேறுபட்ட நிலைப்பாடு அமெரிக்காவின் உயர் மட்டங்களிடையே தேவையற்ற சர்ச்சையை தோற்றுவித்து விடக் கூடுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-2)

### பிரி. பிரதமர் ரொனிபிளேயர்

# நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

(லண்டன்)

பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிற் கெலியின் மரணம் தொடர்பான விசாரணைக்காக எதிர்வரும் 28 ஆம் திகதி லண்டன் நீதிமன்றத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆஜராகவுள்ளார்.

தற்போது விடுமுறையில் வெளிநாடு ஒன்றிற்கு சென்றிருக்கும் பிளேயர், நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு தயாராகும் பொருட்டு தமது விடுமுறையை இடைநடுவில் முடித்துக்கொண்டு லண்டன் திரும்பியுள்ளார்.

உலக தரிசனம்

இந்த வழக்கின் முக்கிய பிரதிவாதியாகக் கருதப்படும் பிரிட்டிஷ் பாதுகாப்பு செயலாளர் ஜேவிகூன் எதிர்வரும் 27ஆம் திகதியும் ஈராக்கில் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறும் சர்ச்சசைக்குரிய ஆவணங்களை தயாரித்த கூட்டுப் புலனாய்வுத் தலைவர் ஜோன் ஸ்காலன் ஆகியோர் எதிர்வரும் 26ஆம் திகதியும் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளனர். (உ-9)

### பாபர் மசூதியின்

# இடிபாடுகளுக்கிடையில் இந்து ஆலயம் இருந்ததா?

(சென்னை)

16ஆம் நூற்றாண்டில் அயோத்தியில் நிர்மாணிக்கப்பட்டு 1992ல் நிர்மூலமாக்கப்பட்ட பாபர் மசூதியின் இடிபாடுகளுக்கிடையில் இந்து ஆலயம் ஒன்று இருக்கின் றதா என்பதைத் தீர்மானிப்பதற் கான அறிக்கையொன்றினை இந்தியத் தொல்பொருள் ஆய்வா ளர்கள் உரியவர்களிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அகமதாபாத் உயர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய சர்ச்சைக்குரிய அயோத்தியில் 5 மாத காலமாக ஆய்வுகளை நடத்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் சீல்வைக்கப்பட்ட 574 பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையை பெற்றுக் கொண்டுள்ள இந்தியத் தொல் பொருள் ஆய்வுநிலையம், அதனை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பார்வையிடுமென நீதிமன்ற அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில், இந்து ஆலயம் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் குறிப்பிடப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

(உ-2)

### கமாஸ் இயக்கத்திற்கு உதவும் நிறுவனங்களின்

# சொத்துக்களை முடக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு

(வாஷிங்டன்)

பலஸ்தீனப் போராளிக்குழுவான கமாஸ் இயக்கத்திற்கு நிதியுதவி வழங்கிவருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களினதும் அதன் தலைவர்களினதும் சொத்துக்களையும், வருமானங்களையும் முடக்கிவைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜெருசலேமில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்தே இந்த உத்தரவை அமெரிக்க திறைசேரிக்கு புஷ் அனுப்பி வைத்துள்ளார்.

ஜெருசலேம் குண்டுத் தாக்குதலுக்கு தாமே பொறுப்பென கமாஸ் இயக்கம் கூறியிருப்பது அந்த இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்பதை உறுதி செய்துள்ளதுடன், இஸ்ரேலியர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்துவிட உறுதி பூண்டிருப்பதை தெளிவு படுத்துவதாகவும் புஷ் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலியர்களுக் கும் பலஸ்தீனர்களுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டள்ள மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் ஜெருசலே மில் இடம்பெற்றுள்ள இக்குண்டுத் தாக்குதலினால் முற்றுமுழுதாக சீர்குலைந்துள்ள நிலையில் கமாஸ் தீவிரவாத இயக்கம் இத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றிருப்பது மேலும் அங்கு பல தாக்குதல்கள் இடம்பெறும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளதுடன் மீண்டும் சமாதான முயற்சிகளை அங்கு முன்னெடுப்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாக அமைந்திருப்பதாகவும் அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-2)

# ஓஸோன் படலத்தில் மேலும் விரிசல் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(கான்பரா)

தென் துருவப் பிரதேசத்திற்கு மேலாக உள்ள ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள விரிசல் இவ் வருடம் மேலும் விரிவடையும் என்று அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

அவுஸ்திரேலிய தென்துருவப் பிரதேச நிலையம் ஒன்றிலுள்ள விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வின் மூலமே இது தெரியவந்துள்ளது.

கடும் குளிர் நிலவுவதால் ஓசோன் படலத்தில் இந்த விரிசல் அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஓசோன் படலத்தில் தற்போது காணப்படும் விரிசல் 2000ஆம் ஆண்டு காணப்பட்ட விரிசலுக்கு ஒப்பானது என்று அவுஸ்திரேலிய தென் துருவ பிரிவு விஞ்ஞானி அன்ரோ பிளெக்ஹோசீவ் தெரிவித்துள்ளார்.

சூரியக் கதிர்களில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் ஒரு படலமாக ஓசோன் படலம் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஈராக்கை மீளக் கட்டியெழுப்ப உலக அமைப்புக்கள் ஒன்றிணைவு

(நியூயோர்க்)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதி திரட்டுவது குறித்து ஐக்கியநாடுகள்சபை உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அதிகாரிகள் கூடி ஆராயவுள்ளனர்.

அடுத்த மாதம் முற்பகுதியில் பெல்ஜியத்தில் இந்த அதிகாரி கள் கூடி ஆராயவுள்ளனர்.

இக்கூட்டத்தில் ஈராக்கில் நிர்வாகப் பணிகளைக் கவனித்து வரும் அமெரிக்கா தலைமையிலான நிர்வாகப் பேரவையின் உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, 50ற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒக்டோபர் மாதம் 23,24ஆம் திகதிகளில் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் கூடி ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவி வழங்குவது பற்றி ஆராயவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்திற்கு முன்னோடியாக அடுத்தமாதம் 3ஆம் திகதி பிரஸஸில் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அரபு இராச்சியம், ஸ்பெயின் ஆகிய நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதேவேளை, ஈராக் விடயத்தில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகள் ஐக்கிய நாடுகள் சபையைப் பலவீனப்படுத்தியிருப்பதாகவும் ஈராக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான பணிகளை ஐக்கிய நாடுகள் சபையே முன்னெடுக்க வேண்டுமெனவும் பிரேஸில் ஜனாதிபதி லூலாடிசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பக்தாத்தில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் ஐக்கியநாடுள் அலுவலகத்தின் தலைவரும் பிரேஸிலைச்சேர்ந்தவருமான ''ஷெஜியா வியாராடிமிலோ'' உயிரிழந்ததையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (உ-2)

## கென்யாவில் நடைபெறும் சூடான் சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் அந்நாட்டு அதிபர் நம்பிக்கை

(கார்டூம்)

சூடானில் சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு கென்யாவில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி உமர் ஹுசைன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கென்யாவின் கார்டூம் நகரில் கென்ய வெளிவிவகார அமைச் சர் ஹலீன்ஷியோவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சமாதான உடன்படிக்கையொன்றைக் காணும் பொருட்டு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அரச தரப்பினரும் தீவிரவாத குழுவினரும் துரிதமாக செயற்படவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

சூடானில் இடம்பெற்றுவரும் 20 வருடகால யுத்தத்திற்கு இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படாவிட்டால் இதனைவிட மோசமான விளைவுகள் ஏற்படலாம் என்று பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ள பிரதிநிதிகள் கூறியிருக்கின்றனர். (பி-9)

# விண்வெளி செல்லவிருந்த ஓடம் வெடித்துச் சிதறியது

(பிறேஸிலியா)

அடுத்த சில தினங்களில் விண்வெளிக்கு அனுப்பப்படவிருந்த பிறேஸிலின் ரொக்கற் ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது.

இதனால் பிறேஸிலின் 3வது விண்வெளி ஆய்வுத் திட்டமும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக அந்நாட்டின் விண்வெளி ஆய்வு நிலையம் கவலை வெளியிட்டுள்ளது.

65 லட்சம் டொலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட 65 அடி நீளமான இந்த ரொக்கற்றில் 2 செய்மதிகளை ஆய்வுகளுக்காகப் பொருத்தியிருந்ததாகவும் விண்வெளி ஆய்வுநிலைய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த ரொக்கற் வெடிப்புச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது மற்றும் இதன்போது உயிரிழந்தவரகளின் விபரங்கள் போன்றவற்றை பிறேஸில் வெளியிடவில்லை.

(உ-2)

# தாக்குதல் அச்சுறுத்தலால் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

(பக்தாத்)

பக்தாத்தில் உள்ள பிரிட்டி தூதரகத்தில் பணியாற்றும் இராஜதந்திரிகளும், அதிகாரிகளும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அங்குள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் மீது தீவிரவாதிகளின் தாக்குதல் ஒன்று இடம் பெறவுள்ளதாக பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதையடுத்தே இவர்கள் தமது தூதரகத்தில் இருந்து வெளியேறியுள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பக்தாத்திலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தீவிரவாதத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின்போது 24 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற மறுதினம் தமது தூதரகம் மீது தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர், பக்தாத்தில் பணிபுரியும் தமது தூதரக அதிகாரிகளினது பாதுகாப்புக் கருதி அவர்களை அங்கிருந்து உடன் வெளியேற்றியுள்ளதாக கூறியுள்ளார்.

எனினும் கடந்த செவ்வாய்க் கிழமை பக்தாத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு கமாஸ் இயக்கம் பொறுப்பேற்றுள்ள போதும் பிரிட்டிஷ் தூதரகம் மீதான இந்த எச்சரிக்கை எந்தத் தீவிரவாத அமைப்பினால் விடுக்கப்பட்டது என்பதை பிரிட்டிஷ் வெளிவிவ கார அமைச்சு தெரிவிக்கவில்லை. (உ-2)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக்கு மேலும் 1500 பேர் குலுக்கல் மூலம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி செலுத்தியவர்களில் மற்றுமோர் தொகுதியினருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த ஆயிரத்து 500 பேருக்குமான மீட்புநிதி மீளளிப்பானது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

மீளளிப்புச் செய்யப்படவுள்ளவர்களின் பெயர், விபரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு,

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/ச/31 | திருமதி. வசந்தி செல்வநாதன் |
| யா/ச/59 | திருமதி. றூபி முத்துராஜா |
| யா/ச/79 | கந்தையா கந்தசாமி |
| யா/ச/101 | வயிரமுத்து கிருஷ்ணதாசன் |
| யா/ச/149 | திருமதி. சுசீலாதேவி ஜெயபாலன் |
| யா/ச/158 | செல்லையா கனகரத்தினம் |
| யா/ச/232 | தம்பிப்பிள்ளை இராசதுரை |
| யா/ச/249 | நாகன் செல்வம் |
| யா/ச/371 | மூத்ததம்பி ஜெயச்சந்திரன் |
| யா/ச/419 | திருமதி. பாக்கியம் ஞானப்பிரகாசம் |
| யா/ச/489 | திருமதி. சறோஜினிதேவி பரமானந்தன் |
| யா/ச/514 | சுப்பன் துரைராசா |
| யா/ச/521 | பொன்னுச்சாமி மகேந்திரன் |
| யா/ச/576 | பொன்னர் கணேசன் |
| யா/ச/629 | திருமதி. நாகேஸ்வரி லிங்கலிங்கம் |
| யா/ச/663 | பிள்ளையான் கனகரெட்ணம் |
| யா/ச/679 | அம்பலம் தர்மலிங்கம் |
| யா/ச/689 | சிவமயம் ஸ்கந்தமயம் |
| யா/ச/707 | முருகேசு விருத்தாசலம் |
| யா/ச/727 | சரவணமுத்து மகேஸ்வரன் |
| யா/ச/778 | திருமதி. புவனராணி இராசையா |
| யா/ச/966 | கணபதிப்பிள்ளை பாலசிங்கம் |
| யா/ச/1009 | சிற்றம்பலம் இராசரத்தினம் |
| யா/ச/1053 | முருகேசு சின்னத்தம்பி |
| யா/ச/1083 | நடராசா செல்வராசா |
| யா/ச/1105 | நடராசா செல்வராசா |
| யா/ச/1118 | திருமதி. புஸ்பராணி கனகலிங்கம் |
| யா/ச/1250 | சதாசிவம் செல்வராசா |
| யா/ச/1306 | திருமதி. சறோஜினிதேவி ஸ்ரீபாலச்சந்திரன் |
| யா/ச/1369 | திருமதி. தவமணி நடராசா |
| யா/ச/1389 | முத்துத்தம்பி யோககுமார் |
| யா/ச/1421 | திருமதி. திருமணிச்செல்வி பரமன் |
| யா/ச/1424 | திருமதி. சடாட்சரதேவி லோகநாதன் |
| யா/ச/1428 | அருணாசலம் இராமநாதன் |
| யா/ச/1429 | மாணிக்கம் இராசலிங்கம் |
| யா/ச/1559 | அழகரத்தினம் சரவணபவன் |
| யா/ச/1560 | திருமதி. புவனஜோதி கதிரமலைநாதன் |
| யா/ச/1647 | கதிரவேல் அம்பலவாணர் |
| யா/ச/1726 | சபாநாயகம் இரத்தினராசா |
| யா/ச/1763 | கிருஸ்ணர் சுப்பிரமணியம் |
| யா/ச/1768 | கந்தையா சரவணபவானந்தன் |
| யா/ச/1792 | திருமதி. கோகிலாம்பாள் பிரகலாதன் |
| யா/ச/1819 | திருமதி. தெய்வநாயகி நாகராசா |
| யா/ச/1858 | ஆறுமுகம் குணரத்தினம் |
| யா/ச/1885 | முருகேசு குமாரவேலு |
| யா/ச/1889 | திருமதி. தவமணிதேவி கிருஷ்ணபிள்ளை |
| யா/ச/1935 | கதிரவேலு கந்தையா |
| யா/ச/1972 | முருகேசு செல்வராசா |
| யா/ச/2091 | கந்தன் நாகமுத்து |
| யா/ச/2168 | இராமலிங்கம் விஸ்வநாதன் |
| யா/ச/2281 | கிருஷ்ணர் சித்திவினாயகம் |
| யா/ச/2333 | திருமதி. நிர்மலாதேவி இராமையா |
| யா/ச/2393 | செல்லையா செல்வநாயகம் |
| யா/ச/2394 | ஆசைப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| யா/ச/2414 | கனகசபாபதி செல்வராசா |
| யா/ச/2546 | வேலுப்பிள்ளை சிவானந்தன் |
| யா/ச/2629 | பாலு பரமசிவம் |
| யா/ச/2676 | திருமதி. அன்னலட்சுமி நடராசா |
| யா/ச/2684 | திருமதி. சரஸ்வதி முருகேசு |
| யா/ச/2712 | திருமதி. சிவபாக்கியம் நாகராசா |
| யா/ச/2715 | திருமதி. ஈஸ்வரி பாலேந்திரன் |
| யா/ச/2745 | கார்த்தியேசு இராசதுரை |
| யா/ச/2761 | திருமதி. ஈஸ்வரியம்மாள் பாலசுப்பிர மணியம |
| யா/ச/2786 | திருமதி. இலங்கேஸ்வரி சிவகுரு |
| யா/ச/2832 | சின்னவி சரவணமுத்து |
| யா/ச/2833 | திருமதி. இராசமணி சொக்கலிங்கம் |
| யா/ச/2907 | திருமதி. மனோன்மணி அப்பாத்துரை |
| யா/ச/2969 | திருமதி. கலாநாயகி நந்தகுமார் |
| யா/ச/2973 | சதாசிவம் இரத்தினசபாபதி |
| யா/ச/3023 | திருமதி. மலர் மீனேஸ்வரன் |
| யா/ச/3043 | திருமதி. நாகம்மா தம்பிராசா |
| யா/ச/3082 | வன்னியன் நாகலிங்கம் |
| யா/ச/3097 | திருமதி. கனகம்மா பொன்னையா |
| யா/ச/3118 | திருமதி. திருஞானசுந்தரி தேவேந்திரநாதன் |
| யா/ச/3119 | சம்பந்தர் நாகரத்தினம் |
| யா/ச/3160 | திருமதி. சாருகேசி சிவகந்தராசன் |
| யா/ச/3319 | சீனிவாசகம் வைரமுத்து |
| யா/ச/3334 | இராசரத்தினம் சிறீரஞ்சன் |
| யா/ச/3343 | திருமதி. அருட்கலைவாணி இராசையா |
| யா/ச/3366 | திருமதி. மங்கையர்க்கரசி இரத்தின வடிவேல் |
| யா/ச/3391 | திலகவதி ஆறுமுகம் |
| யா/ச/3440 | திருமதி. தனலட்சுமியம்மா காசிப் பிள்ளை |
| யா/ச/3498 | திருமதி. ஜெயராணி மகேஸ்வரன் |
| யா/ச/3506 | செல்லத்துரை சிவசுப்பிரமணியம் |
| யா/ச/3532 | திருமதி. வியாளாச்சி இளையதம்பி |
| யா/ச/3618 | முருகர் மாணிக்கம் |
| யா/ச/3711 | குணரத்தினம் சுதர்சனன் |
| யா/ச/3718 | பொன்னம்பலம் நடேஸ்வரன் |
| யா/ச/3739 | பவளம்மா தேவராஜா |
| யா/ச/3773 | கந்தையா ஞானசேகரம் |
| யா/ச/3774 | மாணிக்கம் நாகேசு |
| யா/ச/3859 | சின்னத்துரை மகேந்திரன் |
| யா/ச/3883 | சிவப்பிரகாசம் குபேரன் |
| யா/ச/3894 | வயித்திலிங்கம் ஸ்கந்தராசா |
| யா/ச/3954 | முத்துக்குமாரு குமாரசாமி |
| யா/ச/3959 | குமாரசிங்கம் குகதாசன் |
| யா/ச/4046 | சபாபதிப்பிள்ளை றங்கநாதன் |
| யா/ச/4069 | ஞானானந்தராஜா தேவஞானன் |
| யா/ச/4110 | நடராசா மகேந்திரராசா |
| யா/ச/4164 | வயிரவனாதர் முருகேசு செல்லத்துரை |
| யா/ச/4172 | சுப்பிரமணியம் குணரத்தினம் |
| யா/ச/4192 | சின்னத்துரை இன்பராசா |
| யா/ச/4294 | திருமதி. தங்கம்மா சிதம்பரப்பிள்ளை |
| யா/ச/4296 | திருமதி. செல்வராணி கிருஷ்ண மூர்த்தி |
| யா/ச/4332 | வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் |
| யா/ச/4344 | முருகேசு கிருஷ்ணமூர்த்தி |
| யா/ச/4352 | தயாளினி இராஜநாயகம் |
| யா/ச/4370 | பரராசசிங்கம் தங்கவேல் |
| யா/ச/4373 | நடராஜா தேவராஜா |
| யா/ச/4397 | கனகரத்தினம் பிரபாகரன் |
| யா/ச/4420 | திருமதி. இரத்தினேஸ்வரி ராஜா |
| யா/ச/4488 | முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன் |
| யா/ச/4496 | திருமதி. மலர்மாமணியம்மா இராசதுரை |
| யா/ச/4522 | திருமதி. டுவதி சிதம்பரப்பிள்ளை |
| யா/ச/4546 | சந்திரராணி பொன்னுத்துரை |
| யா/ச/4560 | திருமதி. பூலோகநாயகி பேரானந்தசிவம் |
| யா/ச/4649 | திருமதி. புனிதவதி மகாலிங்கம் |
| யா/ச/6800 | சுப்பர் பஞ்சாட்சரம் |

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/தெ/20 | திருமதி. சுகிர்தம் தில்லையம்பலம் |
| யா/தெ/91 | செல்வநாயகமூர்த்தி தேவநாதன் |
| யா/தெ/103 | திருமதி. விக்கினேஸ்வரி சண்முகசுந்தரம் |
| யா/தெ/121 | இரத்தினவேல் ஞானசம்பந்தன் |
| யா/தெ/195 | திருமதி. விஜயலட்சுமி சிதம்பரநாதன் |
| யா/தெ/232 | அம்பலவாணர் சோமபாலன் |
| யா/தெ/249 | தம்பையா விஜயசிங்கம் |
| யா/தெ/314 | திருமதி. விசாலாட்சி சிவசிதம்பரம் |
| யா/தெ/399 | திருமதி. இந்திராணி செல்வேந்திரன் |
| யா/தெ/468 | கணபதிப்பிள்ளை சிவஞானம் |
| யா/தெ/595 | வன்னியசிங்கம் குமாரதாசன் |
| யா/தெ/619 | கணேசனார் நாமநாதன் |
| யா/தெ/641 | திருமதி. நாகம்மா சிவசுப்பிரமணியம் |
| யா/தெ/665 | சிவராமலிங்கக்குருக்கள் நாகேந்திரன் |
| யா/தெ/699 | திருமதி. றோஸ்நேசரத்தினம் செல்வ ரத்தினம் |
| யா/தெ/704 | சீனிவாசகம் செல்வரத்தினம் |
| யா/தெ/732 | சின்னையா ஆனந்தராசா |
| யா/தெ/754 | செல்வநாயகம் செல்வத்தம்பி |
| யா/தெ/767 | சிவஞ்ஞானசுந்தரம்பிள்ளை சிவகுமார் |
| யா/தெ/853 | தம்பு செல்லத்துரை |
| யா/தெ/887 | முருகேசு வினாயகமூர்த்தி |
| யா/தெ/907 | கனகரத்தினம் ரகுலோசன் |
| யா/தெ/993 | திருமதி. சரஸ்வதி இரங்கநாதன் |
| யா/தெ/999 | திருமதி. மனோன்மணி தருமராஜா |
| யா/தெ/1088 | திருமதி. சகிதேவி கந்தையா |
| யா/தெ/1091 | கந்தையா கலாரஞ்சன் |
| யா/தெ/1218 | திருமதி. இராஜேஸ்வரி லோகராஜா |
| யா/தெ/1237 | திருமதி. தங்கம்மா பொன்னுத்துரை |
| யா/தெ/1259 | விசுவநாதர் கனகசுந்தரம் பாலசுப்பிர மணியம் |
| யா/தெ/1352 | சபாரத்தினம் திருமால் |
| யா/தெ/1442 | கந்தையா நல்லையா |
| யா/தெ/1473 | வன்னித்தம்பி வைரவநாதன் |
| யா/தெ/1476 | திருமதி. பரமேஸ்வரி ஜெயரட்னம் |
| யா/தெ/1529 | கவுரிதேவி சுந்தரமூர்த்தி |
| யா/தெ/1606 | திருமதி. தேவாம்பிகை மயில்வாகனம் |
| யா/தெ/1658 | வயிரமுத்து கனகசபாபதி |
| யா/தெ/1677 | வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் |
| யா/தெ/1740 | திருமதி. சறோஜாதேவி சிவபாதம் |
| யா/தெ/1749 | சின்னத்துரை சண்முகநாதன் |
| யா/தெ/1793 | சடையர் ஐயம்பிள்ளை |
| யா/தெ/1865 | திருச்சிற்றம்பலம் யோகரத்தினம் |
| யா/தெ/1950 | திருமதி. நகுலேஸ்வரி சந்திரசேகரம் |
| யா/தெ/1969 | ஆறுமுகம் கந்தசாமி |
| யா/தெ/1976 | செல்லையா சிவயோகநாதன் |
| யா/தெ/2016 | திருமதி. ஞானமலர் துரைச்சாமி |
| யா/தெ/2066 | திருமதி. தயாளமணிஅம்மாள் கனக சிங்கம் |
| யா/தெ/2148 | திருமதி. சோதிலட்சுமி தம்பிரத்தினம் |
| யா/தெ/2156 | நாகராசா சிவபாதசுந்தரம் |
| யா/தெ/2164 | அம்பலவாணர் பாலச்சந்திரன் |
| யா/தெ/2195 | தம்பிஐயா சின்னத்துரை |
| யா/தெ/2199 | விஜயலக்சுமி இரத்தினம் |
| யா/தெ/2247 | தம்பிப்பிள்ளை செல்லத்துரை |
| யா/தெ/2258 | ~~திருமதி. ஜெகதாம்பிகை சத்தியசீலன்~~ |
| யா/தெ/2415 | சுப்பையா பஞ்சரத்தினம் |
| யா/தெ/2439 | முருகையா நவரட்ணம் |
| யா/தெ/2496 | முத்தையா தேவராஜா |
| யா/தெ/2502 | வல்லிபுரம் திருச்செல்வம் |
| யா/தெ/2537 | திருமதி. பூரணம் முருகையா |
| யா/தெ/2559 | பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் |
| யா/தெ/2592 | வேலுப்பிள்ளை அமரசிங்கம் |
| யா/தெ/2642 | திருமதி. இந்திராணி பத்மநாதன் |
| யா/தெ/2666 | முத்துத்தம்பி குணரத்தினம் |
| யா/தெ/2679 | விஜயமாலா கதிரிப்பிள்ளை |
| யா/தெ/2749 | திருமதி. இராசம்மா இரத்தினம் |
| யா/தெ/2797 | திருமதி. மகேஸ்வரி நடராசா |
| யா/தெ/2800 | விஸ்வலிங்கம் திருலிங்கேஸ்வரன் |
| யா/தெ/2842 | மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை |
| யா/தெ/2845 | திருமதி. மீனகாந்தி பாலகிருஷ்ணன் |
| யா/தெ/2872 | வேலுப்பிள்ளை தம்பு நடராசா |
| யா/தெ/2892 | திருமதி. கீதா சிறீஸ்கந்தா |
| யா/தெ/2893 | திருமதி. அன்னலட்சுமி விக்கினேஸ்வரன் |
| யா/தெ/2954 | திருமதி. மங்களேஸ்வரி விமலானந்தராசா |
| யா/தெ/2992 | சின்னத்தம்பி நல்லதம்பி |
| யா/தெ/3007 | பொன்னுத்துரை பாலகுமார் |
| யா/தெ/3008 | இராயப்பு அந்தோனிப்பிள்ளை |
| யா/தெ/3056 | மொய்றா ஜயந்தினி சந்தியாகோ |
| யா/தெ/3081 | அருளம்பலம் நீதிரஞ்சன் |
| யா/தெ/3084 | வன்னித்தம்பி புஸ்பதேவன் |
| யா/தெ/3114 | திருமதி. தெய்வரதி கணேசலிங்கம் |
| யா/தெ/3137 | மயில்வாகனம் லோகேஸ்வரன் |
| யா/தெ/3141 | கதிர்காமு சிவானந்தம் |
| யா/தெ/3157 | திருமதி. பரமேஸ்வரி கந்தையா |
| யா/தெ/3158 | கந்தையா உருத்திரசேனன் |
| யா/தெ/3176 | நமசிவாயம் பாலச்சந்திரன் |
| யா/தெ/3178 | நாகலிங்கம் ஜெயசீலன் |
| யா/தெ/3261 | திருமதி. வசந்தாதேவி பத்மநாதன் |
| யா/தெ/3270 | வல்லிபுரம் குமாரசாமி |
| யா/தெ/3274 | திருமதி. கமலாதேவி சிறிஸ்கந்தராசா |
| யா/தெ/3298 | வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை |
| யா/தெ/3331 | திருமதி. பரமேஸ்வரி விஸ்வலிங்கம் |
| யா/தெ/3391 | பொன்னர் சின்னத்துரை |
| யா/தெ/3397 | கந்தையா சிவராசா |
| யா/தெ/3468 | திருமதி. புஸ்பராணி டெலான்சா |
| யா/தெ/3569 | சண்முகராஜா ஜெகதீஸ்வராஜா |
| யா/தெ/3591 | அரியகுட்டி குகேஸ்வரன் |
| யா/தெ/3594 | சோதிமதி பொன்னையா |
| யா/தெ/3696 | நாகரஞ்சனி செல்லையா |
| யா/தெ/3722 | நாகமுத்து கந்தையா |
| யா/தெ/3740 | பொன்னுத்துரை உருத்திராபதி |
| யா/தெ/3760 | திருஅருட்செல்வி. தவவேந்திரன் |
| யா/தெ/3802 | செல்லத்துரை மகாலிங்கம் |
| யா/தெ/3848 | திருமதி. பிள்ளையம்மா சிவலிங்கம் |
| யா/தெ/3917 | சுப்பையா சிவலிங்கம் |
| யா/தெ/3934 | திருமதி. சறோஜினிதேவி சிவபுத்திரன் |
| யா/தெ/3966 | ஐயாத்துரை சிங்கராசா |
| யா/தெ/3969 | கந்தப்பிள்ளை செல்வநாயகம் |
| யா/தெ/3983 | திருமதி. செல்லம்மா இரத்தினசிங்கம் |
| யா/தெ/4247 | திருமதி. பாலயோகினி சண்முகநாதன் |
| யா/தெ/4281 | இரத்தினம் துரைச்சாமி |
| யா/தெ/4397 | சித்தர் சிதம்பரம் |
| யா/தெ/4411 | திருமதி. தாயீஸ்குணலீலா அருளானந்தம் |
| யா/தெ/4442 | தாமன் சின்னத்தம்பி |
| யா/தெ/4451 | சின்னத்தம்பி சுத்தானந்தம் |

(தொடரும்)

# குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு

(புத்தளம்)

புத்தளம் பிரதேசத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் குற்றச் செயலகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவிற்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கொலை, கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் ஆகிய சட்ட விரோத செயல்கள் கடந்த சில மாதங் களாக புத்தளம் மாவட்டத்தில அதிகரித்துள்ளதாகவும் இதனால் உடனடியாக இக்குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும் என்றும் உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க மேலும் கேட்டுள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபடுபவர் எவராக இருந்தாலும் அவரை உடனடியாக பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இவ்விடயத்தில் பொலிஸார் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது எனவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் குழுவின் தலைவரை நாத்தாண்டியாவில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(உ-10)

# பொங்குதமிழ் நிகழ்வுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## கண்காணிப்புக் குழுவுக்கு விளக்கம்

(வவுனியா)

அடுத்தமாதம் 15ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறப்போகும் பொங்குதமிழ் விழா தொடர்பான ஆலோசனைக் கூடடத்தில் பங்கேற்ற பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினரிடம் விளக்கம் கேட்கும் படையினரின் செயலானது மனிதஉரிமை மீறலாகும்.

இவ்வாறு, நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிபபுக்குழுவின் பிரதிநிதியைசசந்தித்த ஏற்பாட்டுக்குழுத் தலைவர் க.அமிர்தலிங்கம் முறையிட்டுள்ளார்.

பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவானது ஒரு சுதநதிரமான அமைப்பு. எந்த விதத்திலும் பக்க சார்பானது அல்ல. நிரந்தர சமாதானத்திற்காகவும் தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும் குரல்கொடுக்கும் ஒரு மக்கள் அமைப்பாகும்.

நாங்கள் சமாதானத்திற்காகவே குரல் கொடுக்கின்றோம். நாட்டில் அமைதி ஏற்படுத்தப்படவேண்டும் என கோருகின்றோம். அதேவேளையில், தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு சுய நிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வை வலியுறுத்துகின்றோம். பொங்குதமிழ நிகழ்வின் மூலம் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். அதுதான் உண்மை. பொங்குதமிழ் குழுவினர் விடுதலைப் புலிகளுககு ஆதரவானவர்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் என படைத்தரப்பினர் எண்ணிக்கொண்டு உள்ளனர். அது தவறானது. இது அரசாங்கத்திற்கோ பாதுகாப்புப் படையினருக்கோ எதிரான விடயம் அல்ல. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே நோக்கமாகும். அரச அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவில் இடமபெறுவதுபற்றி படைத்தரப்பினர் விளக்கம் கோருவது ஒரு மனிதஉரிமை மீறல் என்றே நாம் கருதுகின்றோம். படையினருடைய இந்த நடவடிககைகளை கண்டிக்கின்றோம் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இவர்கள் முறையிட்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்த பிரகாரம் படையினர் சாதாரண குடிமக்களை பயமுறுததுவது, தொந்தரவு கொடுபபது யுத்தநிறுத்த மீறலாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-13)




நேற்றைய தினம் யாழ்.நாவலர் பாடசாலையில் இடம்பெற்ற சிறுவர் அமைப்பு நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு ஆரம்ப விழாவில் அதிதிகளாகப் பங்கேற்றோரை படத்தில் காண்றீர்கள்.




சிறுமி ஒருவருக்கு உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.



நிகழ்வில் பங்கேற்றோரில் ஒரு பகுதியினர்.

# துர்க்கைஅம்மன் கொடியேற்றம்

(யாழ்ப்பணம்)

தெல்லிப்பழை துாக்கை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

(உ-08)

# நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம் பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் 22ஆம் திருவிழாவான இன்று பரமேஸ்வரி கணேசனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

* * *

நல்லைக் கநதன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப் பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசைச் தொடரில் இன்றுமாலை 6.00 மணிக்கு ''வள்ளிதிருமணம்'' எனும் பொருளில் சிவத்திரு இரா.செல்வ வடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் மண்டப அரங்கில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்திவரும் 'திருவிளையாடற் புராணம்' தொடரில் இன்று ''வெம்பந்தம் தீர்த்த சம்பந்தம்'' என்ற விடயம்பற்றி இசைப் பேருரை இடம்பெறவுள்ளது."

(உ-18)

# பாதாளஉலகத்தினர் கைக்குண்டுடன் கைது

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்கள் இருவரை கைக்குண்டுகளுடன் கிரான்பாஸ் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இவ்விருவரும் பாதாள உலகக் கோஷ்டி ஒன்றின் முக்கியஸ்தர்கள் என தெரிவிக்கப்பட்ட தகவல்களை அடுத்து, அதி தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ் விசாரணைகளில் இருந்து கொலைச் சம்பவங்கள், பாரிய கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் வெளிவரலாமென கிரான்பாஸ் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(தி)

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று மாம்பழத் திருவிழா -22ம் நாள்)



### கள்ளூறும் கந்தன் பதம்

நல்லூரான் பாத மலர்
நாடிச் செல் மனவண்டே!
சொல்லூடு வாராத
சுகமெல்லாம் நீ பெறுவாய்!

அள்ளூறும் ஆனந்தம்
அணிசெய்யும் மகரந்தம்...
கள்ளூறும் கந்தன் பதம்
கருத்தில் எல்லாம் இனிக்கும்

நிவேதிகா

### பொய்மைகளே பொன்றிவிடும்

நாற்றிசையும் வெள்ள மென
நல்லைநகர் நாடி வரும்
வேற்றுமை களே களைந்த
வேலன் அடி யவர்கள்
சாற்றி நிற்கும் சரவணனே
சரணா கதி யென்று
போற்றும் பொரு ளூரைப்
பொய்மைகளே பொன்றி விடும்!

கூடத்தாடி விசி.குஞ்சிதபாதம்

### முருகனை வேண்டுதல்

நினைப்பது நடக்க வேண்டும்
நிரந்தர தீர்வு வேண்டும்
உனைப் பணிந்தேத்த வேண்டும்
உரிமைகள் சேர்க்க வேண்டும்
வினைப்பயன் தீர்க்க வேண்டும்
விடிவினைக் காணவேண்டும்
துணையென நீ இருக்கவேண்டும்
துணிவினை ஏமக்களிக்க வேண்டும்

மதுரகவி

### காலம் முழுதும் அருள் புரிவாய்

நல்லூர்க் கந்தையா நாடு செழிக்க
ஐயா!
நாளும் செய்வோம் நற்செயலை நீயும்
அருள்வாய் நல்லருளை
நாளும் பாடும் உனக்காக நீயும் வருவாய்
நமக்காக
ஆடும் மயிலில் அமர்ந்திருக்கும் அழகா
நாலு பக்கமும் நாடுசெழிக்க வைஐயா
அம்மையும் நீயே அப்பனும் நீயே காலம் முழுவதும்
அருள் புரிவாய் நல்லூர்க் கந்தையா

வேலணை எதிர் குலசிங்கம் பகீரதன்

### ஞானப்பழமாய் விளங்கும் காட்சி

ஞாலம் வலம்வர மூசிகம் தகாதென
நலமுறு தாயும் தந்தையும் உலகென
பாங்குற உன்னி நடையில் வலம்வந்து
மாங்கனி உவப்புடன் பெற்றனர் விநாயகர்
ஒருசிறு கணத்தில் மயில்மேல் விரைந்து
வரும்வழி மாங்கனி கணேசரின் கையில்
இருப்பதை உணர்ந்து மனம்மிக மறுகி
ஆண்டியின் கோலம் அழகுறக் கொண்டு
மாண்புறு பழனியில் ஞானப் பழமாய்
விளங்கும் காட்சியை நல்லூரில் காணவே
வம்மின்! மாந்தர் காண! அருள் மிகுந்திடவே

கவிமணி கந்தமுருகேசதாசனார்

## சிறுவிளம்பரம்

### ஆங்கில வகுப்புக்கள்

ஆண்டு O/L, A/L மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. பரீட்சைக்கு ஏற்ற முறையில் பயிற்சி. ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, காலை வகுப்புகள் பிளாக் வீதி, சங்கானை, மாலை வகுப்புகள் 426 (302), K.K.S வீதி, யாழ்ப் பாணம். (7563)


### அமைச்சர் மகேஸ்வரன் நாடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய கோயில்கள் ஒன்றியத்தின் 6வது சைவ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்த இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ் வரன் கடந்த வியாழனன்று நாடு திரும்பியுள்ளார்.

மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியதுடன், லண்டனிலுள்ள பல்வேறு தமிழ் அமைப்புக்களையும், இந்து அமைப்புக்களையும் இக்காலத்தில் அமைச்சர் சந்தித்துள்ளார்.

இதேவேளை, பிரித்தானியாவிலுள்ள இந்துக் கோவில்கள் சிறப்பான முறையில் இயங்குவது கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்ததாக அமைச்சர் திருப்தி வெளியிட்டுள்ளார். (உ)

### பன்னிரு வேங்கைகள் நினைவுத்தூபி புனரமைப்பு

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை தீருவில் தூபியைப் புனரமைக்கும் பணி யில் வல்வெட்டித்துறை மக்கள் ஒன்றியம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தமிழீழக் கடற்பரப்பில் வைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவாக வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான தூபி 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேதமாக்கப்பட்டிருந்தது.

இப்போது மக்கள் முயற்சி யால் இத்தூபி புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் புனரமைப்புப் பணிக்கு வல்வெட்டித்துறை ஒன்றியம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. (பி-35)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

## சோதிடபலன்

### பிறந்தநாள் பலன்

**டிசம்பர் 21ஆம் திகதிக்கு மேல் ஜனவரி 20ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்கள்**

பொதுவாக இந்த மாதத்திற் பிறந்தவர்கள் மிகுந்த மன வலிமை பெற்றவர்களாக இருப் பார்கள். ஆனால் மற்றவர்கள் இவர்களைத் தவறாகவே புரிந்து கொள்வார்கள்.

சிந்தனையாளர்களாகவோ, தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தகுந்த காரணம் காட்டுபவர்களாகவோ பெரிய அலுவலகங்களில் தலைமைப் பதவி வகிப்பவர்களாகவோ, அரசாங்கத்தில் பொறுப்புள்ள வேலைகளில் இருப்பவர்களாகவோ இவர்கள் இருப்பார்கள்.

மற்றவர்கள் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடப்பதோ, மற்றவர்களுக்கு அடிமைகளாக இருப்பதோ இவர்களுக்குச் சிறி தும் பிடிக்காது. எதையும் தாமா கவே சிந்தனை செய்து, மிகத் தெளிவான, நல்ல முடிவுக்கு வருவார்கள். மற்றவர்களால் இவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம்.

எந்தச் செயலில் இவர்கள் இறங்கினாலும் இவர்கள் அவற்றைச் சிறப்பாகச் செய்துமுடிப்பார்கள். தலைமைப் பதவிக்குப் போராடி அது கிடைக்காவிட்டால் அடியோடு அந்த வேலையை இவர்கள் உதறித் தள்ளுவதுடன் அதில் சிறிதும் அக்கறை கொள்ளவும் மாட்டார்கள்.

இயற்கையாகவே இவர்கள் எல்லா வழிகளிலும் மாறுபட்டவர்களாகவே இருப்பார்கள். அன்பு காட்டுவதிலும் சரி, கடமையைச் செய்வதிலும் சரி, சமுதாயத்தில் தங்களுக்குரிய ஒரு நிலை ஏற்படுத்திக் கொள்ளுவதிலும் சரி, இவர்களுடைய செயல் புதுமையாகவும் வியக்கத்தக்கதாகவும், மாறுபட்டும் அமையும். ஆகையால் இவர்களுடைய பழக்க வழக்கங்கங்கள், பேச்சுக்கள், செயல்கள் எல்லாமே சுற்றுப்புறத்தில் உள்ள வர்களுடன ஒபபிடும்படி அமை யாது!

மதத்தில் இவர்களுக்குப் பற்று இல்லாவிட்டாலும், ஆழ்ந்த பக்தி யுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் பெருமபாலும் மற்றவர்களுக்கு நல்லதையே செய்வார்கள். பொதுவாக இவர்கள் மக்களுக்கென்று, சமுதாயத்திற்கென்று, நாட்டுக்கென்று நல்லதைச் செய்யவே அதிகம் பிரியப்படுவார்கள். தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு நன்மை செய்வதில் அவ்வளவு ஆர்வம் காட்டமாட்டார்கள்.

இவர்கள் பொதுவாக நல்ல பேச்சாளர்களாக இருப்பார்கள். அடுக்கு மொழியில் பேசத்தெரியாவிட்டாலும், இலக்கியவாதி போல் பேசத் தெரியாவிட்டாலும், மிகத் தெளிவாகவும், மிக எளிய மொழியிலும்பேசி மிக எளிதில் மற்றவர்களுக்குப் புரியவைக்கும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. தாம் எண்ணுபவற்றை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய எதையும் மிகத் துணிவுடன் சொல்லுவார்கள். அவர்கள் பேசத் தொடங்கினால், முடிவு இவர்களுக்கே பலனுள்ளதாகவே முடியும். தன் வழிக்கு மற்றவர்களைத் திசைதிருப்பவே இவர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லலாம்.

இவர்கள் செயலை மற்றவர்கள எப்போதும் மிகத் தவறாகவே புரிந்து கொள்ளுவதால், இவர்கள் நேரிடையாகவே பலருக்கு எதிரிகளாகி விடுகிறார்கள்.

ஆனால், இவாகள் எப்போதுமே தமது பொறுப்புக்களை உணர்ந்து, அவற்றில் முடிந்த கவனம் செலுத்துவார்கள். எதுவும் தவறு ஏற்பட்டு விடக்கூடாதே என்று எண்ணி, ஏங்கி அடிக்கடி இவர்கள் துன்பம் கொள்வதால் இவர்களுடைய உடல்நிலை- உளநிலை அடிக்கடி மிகக்கெடுவதற்கு வாய்ப்பு உண்டு.

எந்தவொரு முடிவுக்கும் இவர்களால் மிக விரைவில் வரமுடி யும். எதையும் எப்போதும் இவர் கள் மிகவிரைவில் புரிந்துகொள்ளுவார்கள். ஆனால் முழுமையான தன்னம்பிக்கை இவர்களுக்கு இல்லாத காரணத்தினால் மிக எளிதிலும், காரணமின்றியும் ஊக்கத்தை இழந்து தவிப்பார்கள்.

பெரும்பான்மையாக இவர்கள் சிடுசிடு என்று இருந்தாலும் இவர்கள் உள்ளம் மிகத் தூய்மையானது. மற்றவர்கள் துன்பத்தை இவர்கள் பார்த்து மனம் வாடுவார்கள். இவர்களுள் சிலர் பொது ஸ்தாபனங்களுக்கோ, கல்லூரிகளுக்கோ, விடுதிகளுக்கோ நிதியுதவி பெருமளவில் செய்வார்கள்.

மதத்தில் இவர்களுக்குப் பற்று உண்டாகிவிட்டால், மிகத் தீவிரமாக ஒரு மதத்தில் இறங்கி உருகுவார்கள். பிறகு கண்மூடித்தனமான வழக்கங்களுக்கு ஆளாகி விடுவார்கள் மதத்தைப் பொறுத்தவரையில்!

அறிவு படைத்தவர்களையும், புத்திசாலிகளையும் இவர்கள் போற்றி வணங்குவார்கள்! இவர்களுடைய சிந்தை எப்போதும் ஆழ்ந்ததாகவே இருக்கும். மற்றவர்களின் விஷயங்களில் இவர் கள் எப்போதும் குறுக்கிடமாட் டார்கள். அதைப்போலவே மற்ற வர்கள் இவர்கள் விஷயங்களில் குறுக்கிட்டாலும் அடியோடு இவர்களுக்குப் பிடிக்காது.

பொது வாழ்க்கையிலோ, அரசியல் பதவியிலோ அப்படிப் பட்டவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினால் மிக விரைவில் உயரமுடியும். மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்தால், திறமையுடன் இவர்கள் தமது செயலைச் செய்து முன்னேற்றம் காண முடியும்.

தம்மை எதிர்ப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் துணிவுடன் அவர்களை எதிர்ப்பார்கள். எப்படிப்பட்ட எதிர்ப்புக்களையும் தத்துவஞானியைப் போல் சமாளிப்பார்கள்!

இவர்களுடைய குடும்ப வாழ்க்கையில் எப்போதும் சிக்கல்களும் தொல்லைகளும் மிகுந்திருக்கும். துன்பத்தில் சிக்கித் தவிக்கும் உறவினர்களோ, உடல் நிலை பெரிதும் பாதிக்கப் பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கும் உறவினர்களோ இவர்கள் வீட்டில் நிரந்தரமாக இருந்து அல்லது அடிக்கடி வந்து பணம் காசு உதவி என்று துன்பத்தை விளைவிப்பார்கள். இவர்களுக்கு இப்படிப்பட்ட உறவி னர்களுக்காகத் தம்மைத் தியாகம் செய்துவிடவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்கும். இவர்கள் எப்போதும் தனிமையில் இருப்பதைப் போன்ற உணர்வு இருக்கும்.

இவர்களைப் போன்ற குணமுள்ளவர்களே இவர்களுக்கு நண்பர்களாக வந்து சேருவார்கள்.

**உடல் நிலை**

இவர்களுக்கு அடிக்கடி வயிற்றுக் கோளாறுகள் இருந்துகொண்டேயிருக்கும்! வாயு, பாதங்களில் வலி! அடிக்கடி விபத்துக்களால் கால்களுக்கோ, முழங்கால்களுக்கோ அடிபடுதல் முதலியவற்றால் இவர்கள் துன்பப்படுவது இயற்கை. ஈரலில் நோய் உண்டாக வாய்ப்பு உண்டு. பல் உபாதைகளுக்கு இலக்காவார்கள். தோல் வியாதிகளால் பீடிக்கப்படவும் அதிகமான வாய்ப்பு உண்டு. இவர்களுக்குப் பிடித்த நிறங்கள் சாம்பல், ஊதா, பேப்பிள். (தொடரும்)

# சமாதானப் பேச்சில் ஈடுபட்டவாறே பலத்தைப் புலிகள் பெருக்குகின்றனர்

## வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் கதிர்காமர்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான நடவடிக்கைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பலத்தை மேலும் அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கம் அளித்த விருந்து வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் வெள்ளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டே தமது படை பலத்தை அதிகரிக்கச் செய்து அரசின் பாதுகாப்புப் படையின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு செய்யும் தந்திர புத்தி இருக்கின்றது.

அத்துடன், அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை சாதகமா கப் பயன்படுத்தும் புலிகள் சர்வ



தேச நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அங்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி நிதிகளைத் திரட்டி மீண்டும் ஓர் போரிற்கு ஆயத்தமாகிவருகின்றனர் என் றார். (உ-10)

## சமாதான நீதவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மேல்மாகாண ஆசிரிய ஆலோசகரான தம்பையா அம்பிகைபாகன், கொழும்பு மாவட்ட நீதிபதி எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் கடந்த மாதம் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியருமாவார்.

திக்கரை இந்து இளைஞர் சங்கம், காரைநகர் மணியரசர் சபை போன்றவற்றின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினருமான இவர் சிறந்த சைவ சமய அறிஞராகவும் விளங்குகின்றார்.

### கோழிகளுக்கு மருந்து வழங்கல்

(நெல்லியடி)

கரவெட்டி கால்நடை வைத்திய சாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு 'கம்றோ றணிகட்' மருந்து வழங்கப்பட்டு வருகின்றது. (உ-44)

## தொழில்நுட்பக் கல்லூரிகளில்

# சூழ்நிலைக்குப் பொருந்தாப் பாடங்கள் அகற்றப்படும்

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலைக்குப் பொருந்தாப் பாடங்களை தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர்காசிம் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி எழுப்பிய வாய்மூலக் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய கபீர் காசிம்,

கல்வித்திட்டத்தில் சுருக்கெழுத்துக் கல்வி நீக்கப்பட்டுள்ளதுடன், அதற்குப் பதிலாக கணனிக் கல்வி புகுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (தி)

# புலிகளைத் தடைசெய்யுமாறு எந்த நாட்டையும் கோரவில்லை

## தொழில் அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுமாறும் அவர்களின் நிதி நிலைமைகள் தொடர்பான தகவல்களைத் தாம் எந்த ஒரு நாட்டிடமும் கோரிக்கை விடுக்கவில்லை என தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத்தின் வாய்மொழி மூலமான கேள்விக் குப்பதிலளிக்கையிலேயே இவ் வாறு கூறியுள்ளார்.

அங்கு மேலும் கருத்துக் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக பிற நாடுகள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை மாற்றுவது குறித்து அந்தந்த நாடுகளே முடிவு செய்யவேண்டும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு எந்தவொரு அமைச்சரும் எந்த நாட்டையும் கோரவில்லை என்றார். (உ-8)

## இன்று ஒரு தகவல்

## விளையாட்டின் விவரங்கள்

''ஓடி விளையாடு பாப்பா'' என்று பாடியது எதற்காக வென்றால் எமது உடலையும் மனதையும் சிறு வயது முதலே நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். ஓடி விளையாடு தாத்தா! நீ ஓய்திருக்கலாகாது தாத்தா என்று பாடுவதில்லை. ஏனென்றால் அந்த வயதில் ஓய்வு தான் முக்கியமே தவிர ஓடுவது முக்கியமல்ல.

ஓடி விளையாட ஆரம்பித்த மனிதன் இன்று ஒலிம்பிக் பந்தயம் நடத்தும் அளவிற்கு வளர்ந்து விட்டான். இன்றைக்கென்று இல்லை. கி.மு. 1370இலேயே ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பமாகி விட்டது. முதன்முதலில் கிரேக்க நாட்டில் ஆரம்பமாகி ஒலிம்பியா எனும் சமவெளியில் போட்டி நடந்தது! அதனால் தான் ஒலிம்பிக் பந்தயம் என்று பெயர் வந்தது!

முதலாவது ஒலிம்பிக் பந்தயம் எத்தனை நாட்கள் நடந்ததாக நினைக்கின்றீர்கள்? ஒரேயொரு நாள் தான்! அது மட்டு மல்ல ஒரேயொரு போட்டி தான் பந்தயமாக நடந்தது! அது என்ன தெரியுமா? 186 கஜம் ஓட்டப்பந்தயம்! இப்போது எத்தனை விதமான விளையாட்டுக்கள்! எத்தனை விதமான பந்தயங்கள். உடலுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். அது உற்சாகமானதாகவும் இருக்கவேண்டும். அதற்காக மனிதன் எத்தனையோவிதமான விளையாட்டு முறைகளை உருவாக்கியுள்ளான். அவற்றில் கலை நுணுக்கங்களையும் வேறு கலந்திருக்கிறான்.

Shuttle Cock இருக்கின்றதல்லவா! இறகு பந்து! இந்தியாவில் வாழ்ந்த ஞானேந்திரபோஸ் என்பவர் தான் இதனை முதலில் தயார் செய்தார். முதலில் கொக்கின் இறகை இதற்கென உபயோகப்படுத்திப் பார்த்தார். அது சரிவரவில்லை. பிறகு வாத்து இறகைப் பயன்படுத்தினார். அது பொருத்தமாக இருந்தது. வீட்டினுள்ளே விளையாடுவதற்கான பந்தில் 72 மணிகள் இருக்கும். வெளியில் விளையாடுவதற்கான பந்தில் 84 மணிகள் இருக்கும். பொதுவாக 16 இறகுகள் இருக்கும்.

இறகு பந்துவிளையாட்டு இறகைப்போன்று மென்மையாக இருக்கும். ஆனால் மல்யுத்தப் போட்டி இதற்கு நேர் விரோதம். முகத்தில் கூட நேரடியாகக் குத்து வாங்க வேண்டியிருக்கும். மல்யுத்த வீரர்கள் தேடிப்பிடித்து வாங்கி உண்ணும் பழம் என்ன தெரியுமா? அன்னாசிப் பழம் தான்! உலகமல்யுத்த வீரர்கள் சங்கமே இதனைச் சிபாரிசு செய்கின்றது. காரணம் யாதெனில் மல்யுத்தம் செய்யும் போது முகத்தில் கண்ணுக்குப் பக்கத்தில் அதிகம் குத்து விழும். உடம்பின் பல இடங்களில் காயம் உண்டாகும். அப்போது இரத்தம் கட்டிப்போய்விடும். அன்னாசிப்பழத்திற்கு இரத்தக் கட்டை உடைக்கக் கூடிய அபார சக்தி உண்டு. அதனால் குடும்பஸ்தர்கள் கொஞ்சம் கொஞ்சம் அன்னாசிப்பழத்தை உண்டு வந்தல் அது ஒரு பாதுகாப்பாக இருக்கும் என எண்ணுகிறேன்.

நான் ஏதோ அடிக்கடி குடும்பஸ்தர்களைக் கிண்டல் செய்து கொண்டிருக்கின்றேன் என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. மனைவி சொல்லே மந்திரம் என்று நினைக்கும் கணவன்மார்களும் உள்ளனர். கணவன் சொல்லே மந்திரம் என நினைக்கும் மனைவிமார்களும் உள்ளனர். இந்த மந்திரத்திற்குக் கட்டுப்படாமல் சண்டை செய்து கொண்டு வாழும் தம்பதிகளும் உள்ளனர். இப்படிச் சண்டை செய்பவர்கள் கைவசம் கொஞ்சம் அன்னாசிப்பழத்தை வைத்திருப்பது நல்லது என்பது தான் எனது ஆலோசனை.

குடும்பஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்துஒரு கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தின் தலைவர் ''இங்கு கூடியுள்ளவர்களில் மனைவிக்குப் பயந்தவர்கள் எத்தனை பேர்? அவர்கள் அனைவரும் கையைத் தூக்குங்கள்'' என்றார். அங்குள்ள அனைவருமே கையைத்தூக்கினார்கள். தலைவருக்குப் பெரும் வெட்கமாகி விட்டது! வீரமுள்ள ஆண்மகன் ஒருவன் கூட இல்லையா? என்று தேடினார்கள். பார்த்தால் கூட்டத்தின் மூலையில் ஒருவர் கையைத்தூக்காமல் இருந்தார். பரவாயில்லையே... இதோ ஒருவர் தைரியமாக உட்கார்ந்திருக்கின்றாரே! என்று அவரிடம் சென்றனர். அவர் கூறுகிறார் ''ஹி...ஹி!என் மனைவியைக் கேட்காமல் நான் எப்படி சார் கையைத்தூக்க முடியும்'' எனறார். குடும்பம் என்பதும் ஒரு விளையாட்டுப் போட்டி தான் சிலர் அதில் இப்படி சாமர்த்தியமாக விளையாடி ஜெயித்து விடுவார்கள்!

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## ரயில் கொள்ளையர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நீண்ட ரயில் பயணங்களில் பயணிகளோடு பயணிகளாக இருந்து கொள்ளையடித்து வந்த இருவரை தலவாக்கலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மயக்கம் ஏற்படக் கூடிய ஒருவகையான பொருளை பயணிகளின் உணவிலும். குடிநீரிலும் கலந்து கொடுத்து பயணிகளை மயஙகச் செய்தே கொள்ளையடித்து வந்தனர் என நுவரெலியா பிரதேச பிரதிப்பொலிஸ்மாஅதிபர் விமல் ஆரியரட்ண தெரிவித்துள்ளார்.

இவர்களிடம் இருந்து 20 பவுண் நிறையுடைய நகைகள் மற்றும் பணம் என்பனவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (தி)

## இலங்கை - இந்தியா இடையில்

## பாலம் அமைப்பது தொடர்பில் ஜெயலலிதாவிடம் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையே அமைக்கப்படவுள்ள பாலம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படும் என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இப் பால அமைப்புக் குறித்தும், இலங்கை-இந்திய கப்பல் சேவை குறித்தும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் யஸ் வந் சிங்காவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதனை அடுத்தே தமிழக முதலமைச்சரின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

இதனால்,இலங்கை-இந்தியா இடையேயான கப்பல் போக்குவரத்துத் தொடர்பான ஒப்பந்தம் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஒப்பந்தம் கடந்த 15ஆம் திகதி இந்திய துறைமுக விவகார அமைச்சினால் கைச்சாத்திடப்படவிருந்த போதிலும், முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி)

## 5 வயதிற்குட்பட்ட சிறார்க்கு ஆங்கில மருந்து வழங்க வேண்டாம்

### ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அறிவுறுத்து

(கிளிநொச்சி)

5வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு பனடோல்,ஜீவனி தவிர்ந்த ஏனைய ஆங்கில மருந்துகளை ஆயுர்வேத,சுதேச,கோமியோபதி முகாமை மருத்துவர்கள் கையாள்வதை முற்றாக நிறுத்த வேண்டும் என தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆயுர்வேத.சுதேச, கோமியோபதி முகாமை மருத்துவத்தை மேற்கொள்பவர்கள் கூடுதலான ஆங்கில மருந்துகளையும கையாண்டு வருவதனால் அநியாயமான உயிரிழபுக்கள் ஏற்படுவதுடன், நோயாளர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றார்கள்.

குறிப்பாக இத்தகைய ஆங்கில மருந்துப்பாவனையால் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களே பெரும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

எனவே,சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறிப்பாக 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு ஆயுர்வேத ,சுதேச ,கோமியோபதி மருத்துவர்கள் ஜீவனி,பனடோல் தவிர்ந்த வேறு எந்த ஆங்கில மருந்துகளையும் வழங்க வேண்டாம்.

தனியார் மருந்து நிலையங்களும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என தமிழீழ சுகாதாரத் துறையினர் கேட்டுள்ளனர். (உ-10)

## இராசி பலன்

**24. 08. 2003**

**(ஆவணி 07,ஞாயிறு)**

துவாதசி- பி. இ. 12.36 வரை
புனர்பு,சம் - பி.இ. 05. 10 வரை
இராகுகாலம் - 4.35 - 06.05
சுபநேரம் - 09.05- 10.35

**மேடம்**
நல்ல முயற்சி, இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, நண்பர்கள் உதவி.

**இடபம்**
மாதர் நட்பு, கௌரவக்குறைவு, வாக்குவாதம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
புதிய பொருள் சேர்க்கை, ஜனவசியம், சிந்தனை மிகுதி, சகோதரர் உதவி.

**கடகம்**
[illegible]தா சிந்தை, கோபப்படுதல், காரிய தாமதம், பயணம்.

**சிங்கம்**
எடுத்தகருமங்கள் கைகூடும், போசன சுகம், தெய்வதரிசனம், நல்ல வருமானம்.

**கன்னி**
சுப நிகழ்ச்சி, உற்சாகம், தொழில் முன்னேற்றம், காரிய சிந்தை.

**துலாம்**
ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, உடல் உழைப்பு, புதிய முயற்சி.

**விருச்சிகம்**
வீண்தொல்லை, உடல் நலக்குறைவு, அபகீர்த்தி, காரிய தடங்கல்.

**தனுசு**
அபூர்வ சந்திப்பு, காரிய சித்தி, திடீர் நன்மை,வாகன .வசதி.

**மகரம்**
சத்துருஜெயம், தன வரவு, திடீர் பயணம், பிறருக்கு உதவுதல்.

**கும்பம்**
பிரயாண இடையூறு, தாழ்ந்த சுபாவம், நிலைக்கேடு, திடீர் நன்மை.

**மீனம்**
புதிய விடயம், தன்னம்பிக்கைக் குறைவு, தொழில் நன்மை, முயற்சி தாமதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வாகனங்களை வழிமறித்து கொள்ளையர் கைவரிசை

### பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(காலி)

பயணிகள் பஸ் வண்டிகளை வழிமறித்து பணம்,நகை மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களைச் சூறையாடிய கொள்ளைக் கோஷ்டியினர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் கொள்ளைக்கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

மேற்படி சம்பவம் கடந்த வியாழக்கிழமை அதிகாலை காலி-ஹவுங்கலப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாது,

காலி- ஹவுங்கலப் பகுதி வீதியால் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்வண்டி ஒன்றை வழி மறித்த 6 பேரை உள்ளடக்கிய கொள்ளையர் பொல்லுகள், துப்பாக்கிகள்கொண்டு பயணிகளை அச்சுறுத்தி அவர்களிடமிருந்து ஏராளமான பணம், நகை போன்றவற்றை அபகரித்துள்ளனர்.

அத்துடன். இவ்வீதி வழியே வந்த 5 பஸ் வண்டிகளும் இவ்வாறு வழி மறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன. இதேபோன்று அம்பலாங்கொடயிலிருந்து காலி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸை வழி மறித்து சாரதியை மிரட்டிப் பணம் பறிக்க முற்பட்ட வேளை,தகவல் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்த அம்பலாங்கொட பொலிஸாரை கொள்ளையர் தாக்க முற்பட்டதையடுத்து பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டிலே கொள்ளையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன்,இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்கள் பயன்படுத்திய துப்பாக்கிகள்.பொல்லுகள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொட, ஹவுங்கலப் பகுதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-18)

## மேல் மாகாண முதலமைச்சருக்கு எதிராக மற்றுமோர் மனுத்தாக்கல்

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் கே. றெஜினோல்ட் குரேயின பதவியைத் தடை செய்யுமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் மற்றுமோர் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியினூடாகப் போட்டியிட்டு மினுவாங்கொட நகரசபைக்குத் தெரிவான நாலக ராஜபக்ஷ என்பவரே இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். முதலமைச்சராகக் கடமையாற்றும் றெஜினோல்ட் குரே மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடாதவர் என மனுதாரர் வாதிடுவதுடன்,அண்மையில் உயா நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்வின்படி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாத ஒருவர் அதன் அங்கத்தவராக இருக்கமுடியாது எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, றெஜினோல்ட் குரே முதலமைச்சராகப் பதவி வகிப்பதை எதிர்த்து ஏற்கனவே 3 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-10)

## சிங்கப்பூர் சென்ற விமானத்தில் பயணம் செய்த இலங்கையர் மரணம்

(கொழும்பு)

சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் பயணஞ் செய்த இலங்கைத் தமிழர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் நோக்கிப் பறந்த விமானத்தில் ஒரு மணி நேரம் வரை பயணம் செய்த செல்லையா கந்தையா என்பவர் கடும் சுகவீனத்தினால் அவஸ்தைப்பட்டதையடுத்து விமானம் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரம் அவசரமாக தரையிறககப் பட்டது.

இதனால்,விமானம் தாமதமாகவே சிங்கப்பூரை அடைந்ததாகவும் விமானத்தில் சுகவீனமுற்ற மேற்படி பயணி கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு சில நிமிடங்களில் உயிரிழந்து விட்டதாகவும் விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-10)

விலை பகை என்றிரண்டின் அச்சம்
நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்
– குறள்

வலம்புரி

## கிழக்கில் தொடரும் பதற்றம்

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதில் இருந்து முஸ்லிம் தலைவர்கள் நிம்மதியிழந்துவிட்டனர். இராமனுக்கு முடிசூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அயோத்தி மாநகரில் கூனி எப்படி குழம்பிப் போயிருந்தாளோ அதே போன்று அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் முஸ்லிம் தலைவர்கள் ஊண் உறக்கம் மறந்துவிட்டனர்.

தமிழர்களுக்கு உரிமை கிடைப்பதற்கு முன்னதாக முஸ்லிம்களின் உரிமையைப் பெற்றுவிட வேண்டும் என்ற பேராசையே முஸ்லிம் தலைவர்கள் குழம்பிப் போவதற்குக் காரணமாக இருந்தது.

இராமனுக்கு முடிசூட்டு விழா நடப்பதற்கு முன்னதாகப் பரதனுக்கு முடிசூட்ட நினைத்து கூனி தாளம் போட, அதற்கு கைகேயி கூத்தாட, தசரதச் சக்கரவர்த்தி மாண்டது போல, அரசும், விடுதலைப் புலிகளும் புரிநதுணர்வு ஒப்பந்தம் செய்து கொணடு, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்ட வேளையில், கூனியின் வேலையை முஸ்லிம் தலைமைகள் முன்னெடுக்க முற்பட்டதன் விளைவாக சமாதான முயற்சிக்கே பேராபத்து நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் இன்னமும் நிரந்தரத் தீர்வை நோக்கி நகராத நிலையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை முன்வைப்பது எல்லாவற்றையும் குழப்பியடிக்கும் செயலாக அமைவதுடன் ஓர் பொறுப்பற்ற செயலாகவும் கருதப்படும்.

நாட்டில் சமாதானம் ஏற்படுவதை எதிர்பார்த்து எல்லோரும் காத்திருக்க முஸ்லிம்கள் மட்டும் சமாதானத்தை குழப்பியடிக்க முயற்சிப்பது இந்த நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

சமாதானச் சூழ்நிலை தற்போது நிலவும் வேளையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் காணாமல் போதல், கடத்தப்படுதல் போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதன் பின்னணியில் சில முஸ்லிம் கட்சிகள் செயற்படுகின்றனவோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. இத்தகைய சம்பவங்களைத் திட்டமிட்டு அரங்கேற்றுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின்கீழ் முஸ்லிம் மக்கள் இருக்க முடியாதென்ற தோற்றப்பாட்டைக் காட்டுவதே முஸ்லிம் தலைமைகளின் நோக்கமாகும்.

இதன் அடிப்படையிலேயே நேற்றுமுன்தினம் கல்முனைப் பகுதியில் கூடிய முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகம் நோக்கி ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட நிகழ்வு அமைந்துள்ளது. இத்தகைய நிகழ்வுகளின் மூலம் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே விரிசலை ஏற்படுத்தி தமது இலக்கை அடைவதே முஸ்லிம் தலைமைகளின் நோக்கமாகும்.

# இறைதூதுவர் இயேசுவின் ஆணைப்படி நல்வழியில் வாழ்ந்து நற்பேறடைவோம்

இரவும் பகலும் மாறி மாறி, நாட்கள் காலங்களாக ஓடிக்கொண்டிருக்கின்றன. மனிதர்களின் செயல்



களும் நல்லதும், கெட்டதும் கலந்தவையாகச் செயற்படடுக் கொண்டே இருக்கின்றன. மனிதர்கள் ஒளியின் மக்களாகவும் இருளின் மக்களாகவும் இருப்பதையும நாம் காண்கின்றோம். இருளின் செயல்கள் பாவத்திற்கு உரியனவாகவும் ஒளியின் செயல்கள் நன்மைக்குரியனவாகவும் விளங்குகின்றன. ஒளியில் நடப்பவன் இடறி வீழ்வதில்லை. இருளில் நடப்பவன் பலவகைத் துன்பங்களுக்கு ஆளாகின்றான். அவன் உலகத்துக்கு உரியனவாகப் பொருள் சம்பாதிப்பவனாகவும் சிற்றின்பப் பிரியவனாகவும் அந்தச் செயல்களைச் செய்பவனாகவும் குற்றச்செயல்களைச் தூண்டி விடுபவனாகவும் செயறபட்டு நடுவூரில நச்சுமரமாக இருக்கின்றான். துன்மார்க்கர்களை இயந்திரக் கல்லை கழுத்தில் கட்டி சமுத்திரத்தில் ஆழ்த்தி விடுமாறு இயேசுவே கூறி இருக்கிறார். ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும், நன்மையின் நாயகர்களாகவும், ஒளியின் மக்களாகவும் வாழவேண்டுமென்றே இறைவன் எதிர்பார்க்கின்றார். எம் வாழ்வு எப்படியானது? நெஞ்சத்தைத் தொட்டு எம்மால் கூற முடியுமா?

### ஞானமுள்ள வாழ்க்கை

இவ்வுலகப் போக்கின்படி எல்லாவற்றையும் அனுபவித்துத் தீர்க்க வேண்டுமென்றே மனிதன் விரும்புகிறான். ஊன இயல்பின் இச்சைகளை நாடுகிறான். இறைவன் விரும்பாத முறணபட்ட வாழ்க்கை இதுவாகும். ஆவிக்குரிய வாழ்க்கையே இறைவனுக்கு உகந்த வாழ்க்கை ஆகும். இருளின் செயல்களும் பாவ வாழ்க்கையும் இறைவனுக்குச் சினத்தை வருவிக் கின்றன. பயனறறவாழ்க்கையானது உண்மை, நீதி போன்றன. இவை நன்மையை விளைவிக்காமல் பொல்லாத நாட்களின் காலத்துக்குள் இட்டுச்சென்று தீயவனான

## பரமபிதா காட்டிய பாதை

சாத்தானுக்கு உரியவாகளாக நல்லவர்களையும் மாற்றுகின்றது.

போதை வஸ்துக்களும், பாலியல் வன்முறைகளும், களவு, கொலை, தீய நாட்டச் செயல்களும் இன்று சமூகத்திலே மலிந்து காணப்படுவதற்குக் காரணம், உலகம் உண்மைக்குப் புறம்பானவைகளையும், போலியானவைகளையும் பணவருவாய் தரும் வழிகளையுமே தேடி ஓடிக் கொண்டிருக்கின்றது. ஞானத்தின் வழிகளை நாடுவோரும் தேடுவோரும் மிகச் சொற்பமானவர்களாகவே இருக்கின்றனர். புனித பவுலடியாா "ஆகையால் உங்கள் நடத்தைகளைப பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள் ஞானமற்றவர்களாய வாழாமல் ஞானமுள்ளவர்களாய் வாழுங்கள். இந்த நாட்கள் பொல்லாதவை ஆகவே காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள்" (எபே.5:15) என்று அழைப்பு விடுக்கின்றார்.

### ஆண்டவரது திருவுளம்

இறைவனின் திருவுளப்படியே, அவரது திட்டத்திற்கு ஏற்கனவே இவ்வுலகம் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அத்திருவுளம் எதுவென நாம் பல வேளைகளிலே அறிந்து கொள்ளாதவர்களகச் செயறபடுகின்றோம். எமது திட்டஙகளை இறை திட்டங்களாக மாற்றத் துடிக்கின்றோம். எமது வேண்டுகோளகளுக்கு இறைவன் செவிசாய்க்க வேண்டுமென்று எண்ணி வெளி ஆயத்தங்கள, ஆடம்பரஙகள, சடங்குகளிலே நம்பிக்கைவைத்து இறைவன் எஙகள் விருப்பங்களுக்கு இணஙகவேண்டும் என்று கங்கணங் கட்டுகின்றோம். வேதம் கூறுகிறது "அறிவிலிகளாய் இராமல் ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்து கொள்ளுங்கள்" (எபேசி.5:17) ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு திருப்பாடல்கள் புகழ்பாககள் ஆகியவற்றை உளமாரப பாடி இறைவனை நாம போற்றும்போதே இறைவனுடைய திருவுளம் எது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

### ஆன்மீகவாழ்வுப் பயணம்

மண்ணக வாழ்க்கையில் நின்று நீந்தி, விண்ணக வாழ்வுப் பயணத்தில் பயணிக்கும் பயணிகளாகவே நாம் இருக்கின்றோம். இவ்வுலகம், மறுவுலகப் பயணத்திற்கு ஆயத்தம் செய்யும் பயணத தளமாகவே இருக்கின்றது. இது எமக்கு நிரந்தரமான தலல. விண்ணகமே எமது தாய்நாடு. ஆன்மீக வாழ்வுப் பயணத்தை தொடர்வதன் மூலமே ஆண்டவனின் பிரசன்னத்தையும், அவருடைய திருவுள விருப்பதையும் நாம் கண்டுகொள்ள முடியும். விண்ணகப் பயணத்தை நாம் தொடர வேண்டுமாயின், வாழ்வு தரும் உணவாகிய நற்கருணையை தகுந்த ஆயத்தங்களோடு எமது ஆன்மீக உணவாக நாள்தோறும் ஆவலோடு உட்கொளவதன்மூலமாக ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும் அருள் வரஙகளையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும். எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார், நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழவர் (யோவான் 6:56, 57) என்று இயேசுக்கிறிஸ்துவே எமக்குக் கூறியுள்ளார். இவ் உண்மையை அறிந்துள்ள நாம் அவரது வார்த்தையை ஏற்று வழி நடப்போம்.

### வாழ்வே சாட்சியம்

ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னை நோக்கி அழைப்பவனல்ல. எனது வார்த்தையின்படி வாழ்பவர்களே மீட்பைக் காண்பர் என்று இயேசு தாமே எமக்கு வார்ததையான நற்செய்தியின் மூலம் கூறிவைத்திருக்கின்றார். இயேசு எமக்குச்சாட்சியமாக வாழ்ந்து தமது அப்போஸ்தலர்களிடம் தமது பணியை விட்டுச்செனறார். அப்போஸ்தலர் தமது சாட்சிய வாழ்வால் திருச்சபையிடம் அப்பணியை விட்டுச்

ஆன் நிலோஜினி அன்னபூரணி

சென்றார். திருச்சபையில் அங்கம் வகிக்கும் நாம் ஒவ்வொருவரும் சாட்சிகளாக வாழவேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இயேசுவின் விருப்பத்தை நிறைவேற்றும் போதே நாம் இறைவிருப்பத்தை நிறைவேற்றியவர்களாவோம். எனவே நாம் பெற்றுக்கொண்ட வாழ்வுக்கு இறைவனுகக்கு நன்றிகூறி நாளும் அவருடைய வார்த்தையின்படிவாழ இறை அருளை வேண்டுவோம்.□

# மீனவர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி தலைநகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்

## எச்சரிக்கிறது பொது ஜன ஐக்கிய முன்னணி

(கொழும்பு)

இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது விட்டால் மீனவர்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்த நேரிடுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரவீர நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மீனவர்களுக்கு நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்கக் கோரும் பிரேரணை மீதான உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாடுமுழுவதும் வாழும் மக்களில், பின்தங்கிய நிலையில் மீனவர்களே இருக்கின்றனர்.

விவசாயத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா விவசாயத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, விவசாயிகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

அதேபோன்று மீன்பிடித்துறை அமைச்சரும் நிவாரணங்களைப் பெற்றுத் தரவேண்டுமென கோரிக்கை விடுததாா.

அத்துடன் மீனவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களை அரசு துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்எம் சந்திரசேனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

(தி)

# நீதிமன்ற நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்குத் திட்டம்

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருததி வங்கியினால் நடத்தப்பட்ட ஆசிய நாடுகளின் நீதிபதிகள் மாநாட்டில் கலந்துகொண்டு அறிக்கை சமா்ப்பிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற இம் மாநாட்டில் பாகிஸ்தான், பங்களாதேஷ், தாய்லாந்து, வியட்னாம், இந்தோனேசியா, இலங்கை உட்பட பல நாடுகளின் நீதிபதிகள் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் நீதிமன்ற நடவடிக்கைககளை விரிவுபடுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிபெறுவது குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்படி முதறகட்டமாக பாகிஸ்தான் நீதிமன்ற நடவடிக்கைகள் விரிவுபடுததப்படவுள்ளன. அத்துடன் இலங்கை நீதிமன்ற நடவடிக்கைகளை விரிவுடுத்தவும் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

# விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00மணிக்கு நிலையத் தலைவர் இ.முருகையாவின் தலைமையில் நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

ளேமற்படி விளையாட்டு விழா நிகழ்வில் திருகோணமலை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.பரமசிவம் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் மின்சாரசபை மின் அத்தியட்சகர் அ.நாகராசா, இளைப்பாறிய அதிபர் த.நடராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.குமாரவேல் மற்றும் சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர் கி.சந்திரவதனா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(உ-18)

# சொத்து விபரங்களை வெளியிட 30ஆம் திகதிவரை அவகாசம்

(கொழும்பு)

அமைச்சரவை அங்கீகாரத்தின்படி சொத்து விபரங்களை இம்மாதம 15ஆம் திகதி வரை வெளியிடாதவர்களுக்கு அவற்றை வெளிப்படுத்த வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் இம்மாதம் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வரி மன்னிப்புக் காலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால அதற்கென வழங்கப்பட்டிருந்த கால எல்லைக்குள் சொத்து விபரங்களை வெளியிடாதவர்களுக்கு அதுபற்றிய விபரங்களை வெளியிட முடியவில்லை.

இதனால் இதற்கென முன்னர் வழங்கப்பட்ட காலக்கெடு 30ஆம் திகதி வரை நீடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என் நிதியமைச்சர் கே. என்.சொக்ஸி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உள்நாட்டிறை விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்ட மூலத்தை சமர்பபித்துப் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

இக் காலநீடிப்பு சம்பந்தமாகத் தொடர்ந்து சொக்ஸி கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கனவே இதற்காக வழங்கப்பட்டிருந்த காலக்கெடு போதிய அளவில் இருக்கவில்லை. அத்துடன் இச் சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றில் வழககுத்தாக்கலும் செய்யப்பட்டிருந்தது. அதனால் பல தடைகள் ஏற்பட்டன. அந்த வழக்கின் தீர்ப்புக்கிடைக்கும்வரை எம்மால் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கமுடியாமல் போய் விட்டது. இதனாலேயே காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18)

## தினசரி தியானம்

### ஆசனப் பயிற்சி

எல்லா மாணாக்கரும் ஆசனங்கள் செய்ய வேண்டும். குறிப்பாகச் சிரசாசனம் செய்ய வேண்டும். ஆசனங்களின் அரசன் எனப்படும் சிரசாசனம் மூளைக்குத் தேவையான இரத்தத்தைச் செலுத்துகிறது. மூளைப் பகுதி முழுவதும் இரத்த ஓட்டம் பெறுகின்றது. இதனால் நல்ல நினைவாற்றலைப் பெறுவீர்கள். பழக்கத்தால் இதன் உண்மையை உணர்வீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# வாகனம் உருண்டதால் சாரதி துடிதுடித்துப் பலி

## வட்டக்கச்சியில் துயரம்

(மருதங்கேணி)

வாகனத்துக்கு கீழே படுத்திருந்து அதனைத் திருத்த முயன்ற வாகனச் சாரதி, வாகனம் உருண்டு அவருக்கு மேலே ஏறியதில், நசியுண்டு அவ்விடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

இத்துயரச் சம்பவம் நேற்று முன்தினம் வட்டக்கச்சி புளியம்பொக்கனை வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வாகனத்தின் சாரதியான வவுனியா மகா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த வ. மகாலிங்கம (வயது-48) என்பவரே மரணமானவராவர்.

கனரக வாகனமொன்றின் சாரதியான இவர், வாகனத்தை இயக்கிய போது, அதில் ஏதோ கோளாறு இருப்பதை உணர்ந்து, அதனைத் திருத்துவதற்காக வாகனத்துக்கு கீழே படுத்திருந்து அதனைத் திருத்த முயன்ற போதே இத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-35)

# வீதியில் நின்ற இளைஞன் மீது சைக்கிளில் வந்த படையினர் தாக்கு

## ம. உ. ஆ. கு. இல் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மிதிவண்டியில் வந்த படையினர் இருவர், வீதியில் நின்ற இளைஞனைத் தாக்கிய சம்பவம் ஒன்று கடந்த 17 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பொற்பதி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

தாக்கப்பட்டவரான இதே இடத்தைச் சேர்ந்த இ. ஜெயச்சந்திரன் (வயது-22) இது குறித்து நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ தினத்தன்று வீட்டு வாயிலை அண்டிய வீதிப்பகுதியில் தான் நின்றிருந்த போது, ஒரு மிதிவண்டியில் வந்த இரு சிப்பாய்களில் ஒருவரின் முழங்கை தனது கையுடன் முட்டுப்பட்டதாகவும்,

இதனால் ஆத்திரமடைந்த படையினர் தம்மைக் கண்டபாட்டில் தாக்கியதுடன் இது யுத்த சூழ்நிலையானால் சுட்டுக் கொன்றிருப்போம் என எச்சரித்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## கனவிலும் ஜனாதிபதிக்கு...



# இந்திய மீனவர்களை விநாயகமூர்த்தி பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 இந்திய மீனவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றுமாலை நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

மீனவர்களை விடுவிப்பது தொடர்பாகச் சட்டமாதிபருடன் விரைவில் தான் பேச்சு நடத்தவுள்ளதாகக் கைதிகளிடம் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 மீனவர்களில் நான்கு பேரின் வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்றத்தில் பதிவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

# பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி விரைவில் இலங்கை வருகை

(கொழும்பு)

பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்டின் ஆட்டிக்காரி விரைவில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அழைப்பின் பேரில் இங்கு வரும் மார்டின், அரசியல் தலைவர்கள் ,அரசியல் யாப்பு நிபுணர்கள் மற்றும் மதப் பெரியார்கள் ஆகியோரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நமீபியா, சொகோவா, வட அயர்லாந்து ஆகிய நாடுகளின் பிரச்சினைத் தீர்வுகளின் போது. இவர் நடுவராகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# முன்னோடித் திட்டம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் 6 புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இது தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் ஜே. வி. குணவர்த்தன தகவல் தருகையில்,

மென்கலங்கள், கடினக்கலங்கள், தொழில்நுட்பம் என்ற பிரிவின் கீழ் இந்த 6 பாடங்களும் கொண்டு வரப்படவுள்ளன.

உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் முதல் வருடத்தில் இப்பாடங்களில் ஏதாவது ஒன்றை கட்டாயமாக கற்க வேண்டும்.

கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட 35 பாடசாலைகளில் ''முன்னோடித் திட்டம்'' என்ற அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும் என்றார். (தி)

# திலீபனின் நினைவுத் தூபி நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவுத் தூபி நாளை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நல்லூர் கந்தன் ஆலயத்தின் மேற்குப்பகுதியில் 1990ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந் நினைவுத்தூபி 1995ஆம் ஆண்டு படையினரால் அழிக்கப்பட்டது. மீண்டும் இவ்விடத்திலேயே நினைவுத் தூபி புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. (ந-3)

## பொலிஸ்...

இன்ஸ்பெக்டர்களும், 500 கான்ஸ்டபிள்களுமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கல்முனை, மூதூர், பொத்துவில் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் இந் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இதற்கிடையில் அரசின் இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை தமிழ்க் கட்சிகள் வன்மையாக கண்டித்து வருவதும் தெரிந்ததே. -(தி)

# பண்டார வன்னியன் நினைவு நாள்

(மருதங்கேணி)

மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு நாளை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள இந் நினைவு நாள் நிகழ்வில் காலை நிகழ்ச்சிகள் பண்டார வன்னியனின் சிலை அமைந்துள்ள பகுதியிலும் மாலை நிகழ்வுகள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.(த)

# அமிரின் பவளவிழா மலர் வெளியீடு

(கொழும்பு)

அமிர்தலிங்கம் நினைவுப் பணிக் கழக ஏற்பாட்டில் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 76வது பிறந்த தின நினைவும் பவள விழா மலர்வெளியீடும் இன்று மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## எமது போராட்டத்தின்...

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், அமெரிக்காவில் தங்கியிருக்கும் புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன் அவுஸ்ரேலியாவில் தங்கியிருக்கும் புலிகளின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் புலித்தேவன், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, அவுஸ்ரேலியப் பல்கலைக் கழக சட்டத்துறைப் பேராசிரியர் மனுவேற்பிள்ளை, போல் டொமினிக், சிங்கப்பூர் சட்ட நிபுணர் பேராசிரியர் சொர்ணராசா மலேசியச் சட்டத்துறைப் பேராசிரியர் இராமசாமி, சென்னையைச் சேர்ந்த சட்ட ஆலோசகர் விஸ்வேந்திரன்,சட்ட வல்லுநர் வி.ரி.தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று ஆரம்பமான இம் மாநாடு தொடர்ந்து 10 தினங்கள் வரையும் நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## உள்ளூராட்சி...

அவர் கூறியுள்ளார்,இது பற்றித் இறுதி தீர்மானம் எடுப்பது குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் இதேவேளை தனித்துப் போட்டியிடுவதன் மூலம் வாக்காளர்களின் வாக்குகளை அதிகமாக பெறக் கூடிய வாய்ப்புகள் தற்போது அதிகமாக உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார் (த)

# சீருடைப் பிணக்கு ஆர்ப்பாட்டத்தில் முடிவு

(காலி)

காலியிலுள்ள மகாமோதர வைத்தியசாலையில் கடமையாற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைக்கு வெளியே நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட சீருடை அணிந்து குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் கடமைக்குச் சமுகமளித்திருந்த போதிலும் மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் அந்தச் சீருடைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்க அதிகாரிகள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்தச் சீருடைகளை அங்கீகரித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும், இத்தகைய அங்கீகாரம் எதுவும் வழங்கப்படவில்லை என மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே மகாமோதர வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எதிராக வைத்தியசாலைக்கு வெளியே குடும்ப சுகாதார உ[illegible]தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தி[illegible] ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

## முஸ்லிம்கள்...

புலிகளிடமும் உள்ள சமாதான உணர்வை நாம் கட்டியெழுப்பி அவர்களிடம் நல்லெண்ணத்தை வளர்த்து, இலங்கையல் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதே எமது வருகையின் இலக்கு;

அரசும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சு மேசையில் எமது திணிப்பு எதுவுமே கிடையாது.அவர்களே விடயங்களைப் பேசி முடிவு செய்து வருகின்றனர். இந்த வகையில் நாம் ஒரு வரையறைக்குள்ளேயே இருந்து செயற்படுகின்றோம். பாரிஸ் முடிவுகளுக்குப் பின்னர் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு அமைவாக பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக பங்குபற்றுவது குறித்து அரசும் புலிகளுமே முடிவு செய்ய வேண்டும். இதில் நோர்வே தலையிட மாட்டாது.

கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் குறித்து நாம் மிகவும் கவலை அடைகின்றோம்.மனிதக் கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

குரங்குப்பாஞ்சான் முகாம் பற்[illegible] போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு புலிகளின் நடவடிக்கை, யுத்த நிறுத்த மீறல் என்று குறிப்பிட்டதை, தமிழ்நெற் இணையத் தளம் இருட்டடிப்புச் செய்தமை கவலைக்குரிய விடயம் என்றும் தோமஸ் தெரிவித்துள்ளார். (இ)

# புங்குடுதீவில் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மறுமலர்ச்சி ஒன்றிய ஜேர்மனிக் கிளை நடாத்தும் ஒன்றுகூடலும் கலை நிகழ்வும் இன்று பி.ப 3 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் த.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புங்குடுதீவு ஜேர்மன் மறுமலர்ச்சி ஒன்றியத் தலைவர் எஸ் .செல்வகுமார் கலந்து கொள்ளவுள்ளார் (உ)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்

திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.







இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.